
# பனங்கூடல்



சாகித்ய ரத்னா செங்கை ஆழியான்

கமலம் பதிப்பகம்

# பனங் கூடல்

சாகித்ய ரத்னா செங்கை ஆழியான்

**கலாநிதி க. குணராசா**

**கமலம் பதிப்பகம்**

75/10 A, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| நூல் | : | **பனங் கூடல்** (நாவல்) |
| முதலாம் பதிப்பு | : | 2015 நவம்பர் |
| ஆசிரியர் | : | கலாநிதி செங்கை ஆழியான் க. குணராசா |
| உரிமை | : | திருமதி கமலா குணராசா<br>75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம். |
| விலை | : | 300/- |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,<br>48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13.<br>தொ.பே: 0112330195 |
| ISBN | : | 978-955-1624-18-7 |

| | | |
|---|---|---|
| **Book** | : | **Panam Koodal** |
| First Edition | : | November 2015 |
| Author | : | Dr. K. Kunarasa, B.A. Hons. (Cey), MA, PhD(Jaffna) SLAS I |
| Copyright | : | Mrs. Kamala Kunarasa B.A, Dip in Edu SLPSI<br>75/10 A, Brown Road, Jaffna. |
| Published | : | Kamalam Pathippakam, Jaffna. |
| Price | : | Rs. 300/= |
| Printed | : | Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road, Colombo 13.<br>Tel: 0112330195 |
| ISBN | : | 978-955-1624-18-7 |

# சமர்ப்பணம்



என்மீது அளவுகடந்த அன்பும், பாசமும் கொண்ட

எனது ஆசையக்கா

**அமரர். திருமதி தங்கேஸ்வரி இரத்தினம்**

அவர்களுக்கு

இந்நூல் காணிக்கை

# என்னுரை

எனது 54 ஆவது நாவல் "பனங்கூடல்" இதனைத் தினகரன் வார மஞ்சரியில் 2011 ஆம் ஆண்டு தொடராக எழுதினேன். கடந்த 30 ஆண்டுகள் நடந்த யுத்தமும், இடப்பெயர்வும், அழிவுகளும், மனித உயிர்களின் இழப்புக்களும் எவ்வாறு சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை இந்நாவலின் கருவாகக் கொண்டு எழுதியுள்ளேன். அத்தோடு புலம் பெயர் மக்களிடையே ஏற்பட்டுள்ள சமூக, கலாச்சார மாற்றத்தையும் இந்நூல்மூலம் எடுத்துக் கூறியுள்ளேன்.

வட மாகாணத்தில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தனித்துவமான கலாசாரம், ஒழுக்க விழுமியங்கள், பிரதேச வழமை என்பன மாறுபட்டுக் காணப்படும். இன்று அவை அனைத்தும் மருவி புதுப்புது கலாசார விழுமியங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. உடை, உணவு, தொழில் என்பவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. இந்நாவல் மூலம் அக்காலத் தொழில், உணவு, பழக்கவழக்கங்களை இன்றைய சந்ததியும் வருங்காலச் சந்ததியினரும் அறியவேண்டும் என்பது எனது நோக்கமாகும். அச்சிடுவதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் 2015 இல் வெளியிடப்படுகிறது. அழகாக அச்சிட்டுத் தந்த யுனி ஆட்ஸ் நிறுவனத்தினருக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்

**சாகித்ய ரத்னா செங்கை ஆழியான்**

(கலாநிதி க. குணராசா)

# 1

**தி**ண்ணை விளிம்போடு முற்றத்தில் வெள்ளம் தேங்கி நின்றது. படுக்கைப் பாயைவிட்டு எழுந்து வெளியே வந்த சுப்பையா குனிந்து முற்றத்தில் தேங்கிநிற்கும் மழை நீரையும் கருவென கருகிக்கிடக்கும் வானத்தையும் பார்த்தார். மழை நிற்கப் போவதில்லை என்பது சூழலின் இருட்சியிலிருந்து புரிந்தது. கடந்த இரண்டு நாட்களாகச் சோவெனக் கொட்டித்தீர்த்த வானம் இன்று ஓய்ந்துவிடும் என்பது இன்றும் நம்புவதற்கில்லை.

அவரது இரண்டறைகளைக் கொண்ட மண்வீடும் தலைவாசலும், குசினியும் கொட்டிலும் அமைந்திருந்த வளவு ஒரு பனங்காணி ஆகும். இருபது பரப்பும் முழங்கால் மூடும் நீரில் அமிழ்ந்திருந்தது. வானளாவி உயர்ந்து தாமாக வளர்ந்திருந்த பனைகள் பகலையே இருளாக்கக் கூடியன. மழை இருட்டு இன்னமும் அந்தக் காணியை இருள வைத்திருந்தது. வீட்டுச் சுவர்கள் சுற்றி நின்ற வெள்ளத்தில் நனைந்து நெகிழ்ந்திருந்தன. மண் சுவர்களைக் கொண்ட இரண்டு அறைகள். திண்ணைமட்டும் சீமேந்திட்டு விளங்கினாலும் தூவிய மழைத்துளிகளால் நனைந்திருந்தது. எனினும் ஓரளவு நனையாதிருந்த திண்ணையில் சுப்பையா அமர்ந்தார். அவரது கால்கள் முற்றத்து வெள்ளத்தில் குளிர்ந்தன.

திண்ணையிலிருந்து பார்க்கும்போது அவர் காணியின் வட எல்லை நன்கு தெரிந்தது. அவரது காணி முடியும் எல்லையில் கிழக்கு மேற்காக ஒரு மண் ஒழுங்கை சென்றது. அதற்கு அப்பால் அறுபத்தாறு பரப்புக்கு மேற்பட்ட இன்னொரு பனங்காணி காணப்பட்டது. மேற்குப்பக்கத்தால் நாற்பது பரப்பு அவருடைய மாமன் ஆறுமுகத்துக்கும் கிழக்கால் பன்னிரண்டு பரப்பு

அவருடைய சகலர் பொன்னுத்துரைக்கும் மிகுதி சிதம்பரம் சிவன் கோயிலுக்கும் சொந்தமானவை. சுப்பையா அறியதக்கதாக அந்தப்பனங்காணி கலட்டி கற்பூமியாகவும் வடலி, முட்பற்றைகள் என்பன அடர்ந்த பள்ளக்காணியாகக் கிடந்தது. அந்தப் பள்ளத்தை நரியன்குண்டுப் பள்ளம் என்பர். நரியன்குண்டுப் பனங்கூடல் என்றும் அதனை அழைப்பர். அந்த ஊரின் மழை வெள்ளம் ஓடி கடைசியில் தேங்கும் பள்ளம் அது. ஊர் மக்கள் அவசரத்துக்கு ஒதுங்கும் காணி. இந்த தரிசுக்காணியைக் குத்தகைக்கு எடுத்து பஞ்சமர், அறுபது குடிசைகளை அமைத்து குடியேறும் வரை இந்த வடலிக் காணி கவனிப்பாரற்றுக் கிடந்தது.

அவர் அன்னத்தைக் கலியாணம் கட்டிய போது இன்று அவர் குடும்பத்துடன் வாழும் மண் வீடும் பனங்காணியும் சீதனமாகக் கிடைத்தன. தந்தை வழியில் ஏழு பரப்பு புகையிலைத் தோட்டம் முதுசமாக வந்தது. அவ்வளவு தான். மற்றப்படி வருகின்ற வருவாய் அவர் குடும்பத்தினர் எழுவருக்கும் போதாமல் இருந்தது. அவருடைய மைத்துனர் அதாவது அவர் மனைவி அன்னத்தின் தமையன் பொன்னுத்துரை பக்கத்திலேயே பெரியதொரு கல் வீட்டில் வசதியாக வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி பாக்கியத்தின் இரக்க சுபாவம் பொன்னுத்துரைக்குத் தெரியாமல் சுப்பையாவின் குடும்பத்துக்கு இடை சுகம் உதவியது. இரண்டு நாட்களுக்கு முன் இந்த மழை பெய்திருந்தால் அன்றைய தோட்ட இறைப்பு மிஞ்சியிருக்கும். இரண்டு நாட்களுக்கு முன்-

விடியற் சாமச் சேவல் கூவியது. தலை வாசல் வாங்கில் சுப்பையர் படுத்திருந்தார். முன்னைய இரவு வாங்கில் படுக்கும்போதும் காலைத் தோட்ட இறைப்பு யோசனை தான். சின்னத்துரை, சிவகுட்டி, அரசு மூவருக்கும் அதிகாலையே இறைப்பிற்கு தயாராகும்படி சொல்லியாகிவிட்டது. இப்போது ஆயத்தமாகியிருப்பார்கள். இம்முறை தோட்டத்தில் விளையும் பயிரில்தான் சுப்பையாவின் குடும்பத்தின் எதிர்காலமே தங்கியுள்ளது. கள்ளன் கையில் கொடுத்தாலும் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான புகையிலைக் கன்றுகள் அவர் தோட்டத்தில் உள்ளன.

இக்கன்றுகளை விற்றுத் தான் இம்முறையாவது அவர் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அவர் அருகில் மகன் மணிவண்ணன் படுத்திருக்கிறான். படிப்பை நிறுத்திவிட்டு வெளிநாடு ஒன்றிற்கு ஓடிவிடும் ஆசை அவனுக்கு வந்துவிட்டது. அவனிலும் பிழையில்லை. ஒரு பக்கம் இயக்கம்.

மறுபக்கம் இராணுவம் பிடித்துப்போகக் காத்திருக்கிறது. இவற்றிலிருந்து தப்புவதற்கு வெளியே ஓடித்தப்பவேண்டியது தான். மணிவண்ணனுடன் படித்த பலர் வெளிநாடுகளுக்கு ஓடிவிட்டார்கள்.

“சம்பந்தர் ஓமெண்டிட்டார்… ஒன்றரை இலட்சம் ஆரம்பத்தில தரட்டாம். மிச்சம் ஆறை உழைச்சு தரட்டாம். அதுவும் எமக்காகத்தானாம். ஒரு மாதத்தில கனடாவுக்கு அனுப்புறாராம்.”

“இம்முறை பாப்பம் பொயிலை வித்திட்டு பாப்பம்,” என்றார் அவன் நம்பிக்கையோடு தூங்குகிறான்.

இரவு முழுவதும் அவருடைய மனைவி அன்னம் ஓயாது இருமிக் கொண்டிருந்தாள். அவளை நல்ல டொக்ரரிடம் அழைத்துப் போகவேண்டும். அதிகாலையில் தான் உறங்கிப் போனாள். அவள் அருகில் கலியாணத்திற்குக் காத்திருக்கும் அவரின் இரண்டு குமருகளும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். மூத்தவள் கிளியைக் காணவில்லை. அடுக்களையில் இருப்பாள். இவருக்கு தேநீர் போடுவாள். நல்ல பொறுப்பான பிள்ளை. இருபத்தாறு வயதாகிறது.

அவர் அருகில் மூக்குப் பேணியில் தேநீரை கிளி வைத்தாள்.

தேநீரை அருந்தியபின் அவர் மகளை நிமிர்ந்து பார்த்தார். பின்னர் தலையணையின் கீழ்கிடந்த புகையிலையை எடுத்து சுருட்டாகச் சுருட்டி வாயில் வைத்து நெருப்புப் பற்றியபின்னர் புறப்பட்டார்.

வீட்டிற்குச் சற்றுத் தள்ளியிருந்த மாலுக்குப் போய் நீரிறைப்புப் பட்டையைத் தூக்கித் தோளில் போட்டு மண்வெட்டியை இடக் கரத்தில் எடுத்துக்கொண்டு படலையைத் திறந்தார். சேவல்கள் கூவின. விடிந்து கொண்டிருக்கும் அதிகாலைப் பொழுது.

ஒரு பெண்ணை அலங்கரிப்பதென்றால் இலேசா? இம்முறை புகை யிலையை விற்று கிளியின் கலியாணத்தைப் பார்க்க வேணும்.

“சுப்பையாண்ணை… இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் இப்படி இறைக்கிறது? ஒருவாட்டர் பம்மை வேண்டுங்கோவன்.” என்கிறான் அரசு.

"சரி இந்த முறை வாங்கி விடுகிறன்.."

தாவடியில் தீன் புகையிலைச் செய்கைக்குச் சுப்பையா புகழ்பெற்றவர். இம்முறைச் செய்கையை நம்பிப்பல திட்டங்களை அவர் தீட்டிவிட்டார்.

"காலமை எல்லாருக்கும் புட்டு அவித்து வாறன்" என்றாள் கிளி. அவர் தோட்டத்தை அடைந்ததும் இறைப்புக்காக மற்றைய மூவரும் காத்திருந்தார்கள். ஆயத்தங்கள் விரைவாக நடந்தன. மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு புகையிலைச் செடிகளுள் அரசு மறைந்தார். பாத்திகளில் ஓடிவரும் நீரை செடிகளுக்குள்விட்டு கட்ட அவர் தயார். சின்னக்குட்டியும் சிவகுருவும் துலாவின் பின்பக்கம் சென்று பாரம் கட்டினார்கள். பின்னர் துலாவில் மிதிக்க ஏறிக்கொண்டார்கள். சுப்பையா இறைப்புப் பட்டையைத் தூக்கிக் கொண்டு துலாக்கயிற்றை நாடினார்.

அந்தப் பட்டை பனையோலை குருத்தினால் அனலைதீவில் இழைக்கப்பட்டது. ஆறு மூலைகளைக் கொண்டது. ஒரு துளி தண்ணீரும் கசிந்து விடாதிருக்க நெருக்கமாக இழைக்கப்பட்டு மேற்புறத்தில் பனம் நாரினால் பலப்படுத்தப்பட்டது. ஆறு மூலைகளும் கிணற்றின் மிதி கல்லில் நீரைச் சரிக்கும்போது பட்டையின் ஓலை நொய்ந்துவிடாதிருக்க சுப்பையா லொறி ரியூப்பால் மூலைகளைப் பாதுகாப்பாகக் கட்டியிருந்தார். துலாக் கயிற்றோடு இணைப்பதற்காக பட்டையின் நடுவில் காற்றாடியின் நுட்பத்தோடு மையம் பார்த்து ஒரு தடி இணைக்கப்பட்டிருந்தது. அதன் மத்தியில் அப்பட்டை கிணத்து நீரில் சரிந்து நீர் மொள்ள வாய்ப்பாக ஒரு பட்டைக் கல் துளையிட்டு கொளுவப்பட்டிருந்தது.

"இந்தமுறை சும்மா சொல்லக்கூடாது சுப்பையருக்கு நல்லாத்தான் விளைஞ்சிருக்குது. ஆறு கணுப்பிடிச்சிருக்குது... ஒவ்வொரு இலையும் வாழையிலைமாதிரி பெருத்திருக்குது இப்படியே கன்றாக வித்தாலும் முந்நூறு வரை போகும். மனிசனுக்குக் கடும் கடன் இருக்குது... பாடமாக்கித் தான் விற்பன் என்று பொயிலைப் போறணையையும் தயார் படுத்திவிட்டார். அறுவடை செய்த பொயிலையை உணர்த்த பனை மரங்களை மட்டக்களப்பு வடங்களால பின்னியும் ஆயத்தம் செய்திட்டார். இன்றைக்கு நாளைக்கு அறுவடை செய்யலாம்..." என்று வாய்க்கால் பார்க்கும் அரசு எண்ணிக் கொண்டான்.

இறைப்பு ஆரம்பமானது.

“தொந்தியப்பனே போற்றி” என்று பாடலை துலாவில் நின்றிருந்த சிவகுட்டி ஆரம்பித்தான். மிகுதிப் பாடலை எல்லாரும் பாடியவாறு பட்டைக்குண்டில் பட்டை தட்டுப்படும் வரை இறைத்தனர். அதேவேளை புகையிலைச் செடிகளிடையே நின்றிருந்த அரசு போதும் என்பாற்போலக் குரல் தந்தான்.

பொழுது புலர்ந்தது. தோட்ட வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து உரும்பிராய் வைத்திலிங்கம் இறங்கிவந்தார்.

“வாங்க முதலாளி”

“வரவேற்கிறது இருக்கட்டும் சுப்பையா... இண்டைக்கோ நாளைக்கோ வெட்டப் போறாய்... நல்ல விலைக்கு எனக்கு அப்படியே தாவன். உனக்கும் சிரமம் குறையும். நானே வெட்டிக் கொள்ளுறன்...”

“எனக்கு இந்த முறை தேவைகள் பல இருக்குது.. மூத்த மகளுக்கு நகையள் செய்ய வேணும். ஒரு வாட்டர் பம் வாங்க வேணும். மூத்தவனை வெளிநாட்டிற்கு அனுப்ப காசு தேவை. எல்லாத்துக்கும் இந்தத் தோட்டத்தைத் தான் நம்பியிருக்கிறன். வீட்டுப் பொயிலைப் போறணையையும் தயார் படுத்திப் போட்டன்.. உணர்த்தி புகைபோட்டு பாடமாக்கிவிட்டு விக்கலாம் என்றிருக்கிறன்.. குறை எண்ணாதை அண்ணை”

“நானேன் குறை நினைக்கிறன் சுப்பையா,” என்று விடைபெற்றார் வைத்திலிங்கம்.

“அடுத்தகிழமை வெட்டுவம் அண்ணை. மழைக்கோலமாய் இருக்குது மழைகிழை பெய்தால் பொயிலையில இருக்கிற பாணி எல்லாம் கழுவிப் போகும்.” அந்த நேரம் கடகப் பெட்டியோடு கிளி வந்தாள்.

“நீ ஏன் தங்கச்சி அலைக்கழியிறாய்?” என்றான் அரசு. நீரிறைத்த அந்த நேரக் களைப்பிற்கு அந்த உணவு தேவாமிர்தமாக இருந்தது.

'நீ அண்ணை.. இந்தவாட்டி தங்கச்சிக்கு நகையள் செய்திடு சொல்லிப் போட்டன். ஆண் பிள்ளையின்ர விடயத்தைப் பின்னர் பார்க்கலாம். வைத்திலிங்கத்தாரிடம் அவர் கேட்டபடி கொடுத்திருக்கலாம். சோலியள் குறைவு. உன்ர விருப்பம்.பலபேர் அவருக்கு அப்படி வித்திருக்கினம். பக்கத்துக் காணி மாணிக்கத்தார்... இராமலிங்கத்தார் வித்திட்டினம். ஊர் நிலமையும் சரியில்லை. மழை வரும் போல இருக்குது பொடியளுக்கும் ஆமிக்கும் சண்டை சச்சரவுகள் இன்னொரு பக்கம்.. என்ன நடக்கப் போகுதோ?"

"நீ சொல்லிறதில நியாயம் இருக்குதுதான். மூக்கு உள்ளவரை சளியிருக்கும்."

சுப்பையாவின் கண்கள் முன் கிளி தோன்றினாள். அவளுக்கும் வயதாகிறது.

இந்தத் தோட்டத்தை நம்பி எவ்வளவைச் செய்யிறது.? மகளின் திருமணத்தையா? மகனின் வெளிநாட்டுப் பயணத்தையா?

பலத்த சிந்தனையோடு அவர் வீட்டிற்கு வந்தபோது மழை தூறத் தொடங்கியிருந்தது. அது நல்ல சகுனமாக அவருக்குப் படவில்லை. புகையிலை வெட்டிய பின்னர் வந்திருக்கலாம். புகையிலைப் பாணியைக் கரைக்கப் போகிறது. அந்த நேரம் சம்பந்தர் வந்தார்.

"உமக்காகத் தான் சுப்பையா இதைச் செய்யிறன். உங்கட மகன் என்று சொன்னான்.. மற்றாக்கள் எண்டால் கணக்கு வேறு. உமது மகனை நம்பி அனுப்பலாம். மிச்சக் காசை உழைச்சு வாங்கலாம்... உமக்கு ஒருக்கா சொல்ல வேண்டும். இம்முறை அற்புதமான ஒரு சந்தர்ப்பம் வாய்ச்சிருக்குது வராதபொடியன்ர இடத்தில உம்மடமோனைப் புகுத்த ஏஜன்ற் எனக்காக ஒத்துக் கொண்டார். இப்படி இனிச் சந்தர்ப்பம் வாய்க்காது இருபது முப்பதை வைச்சுக் கொண்டு அலையிறான்கள் இது உன்ரை மோனுக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் சுப்பையா, யோசியாதை. போனால் ஒரு வரியத்தில உழைச்சிடலாம். பொடியளை இங்க வைச்சிருக்கிறது நல்லாயில்லை. தட்டாதெரு பழக்கடைப் பொடியனை ஆசுப்பத்திரியில் வைச்சுப் பிடிச்சிட்டான்கள தம்பிராசாவின் மகள்

இயக்கத்துக்கு ஓடிப்போயிட்டாள்.. இண்டைக்கும் ஷெல் அடிச்சிருக்கான்கள். ஒரு குடும்பத்தில இரண்டு பேர் சரி சண்டை நடக்குது, ஆமி புட்டுக் கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வாறதெண்டு நிக்கிறான்களாம்...” சம்பந்தர் சொல்லிக் கொண்டு போனார். அவற்றைக் கேட்ட சுப்பையா சிந்தனையில் ஆழ்ந்தார்.

அன்று பின்னேரம் வரை மழை தூறிக் கொண்டிருந்தது. பனைகளை இணைத்து கட்டிய கயிற்றுக் கொடிகள் புகையிலையை உணர்த்தத் தயாராக இருந்தன. பொறணைக்கு புகைமூட்டத் தயாராகத் தென்னை மட்டைகள் பறித்திருந்தார். அவை முற்றத்தில் குவியலாகக் கிடந்து நனைந்தன.

நாளை ஒரு நாள் மழை விட்டால் போதும். புகையிலையை வெட்டி திண்ணையில் அடுக்கிவிடுவார். மாலை கவிந்து கொண்டிருந்தது. அவர் எண்ணங்களை நாசமாக்கியபடி மழை கொட்டித் தீர்த்தது.

## 2

அடுத்த நாளும் மழை மீண்டும் தூறத்தொடங்கியது. சுப்பையாவின் பனங் காணிக்கு அப்பால் சுந்தரத்தின் நரியன்குண்டுப்பள்ளப் பனங்கூடல் தெரிந்தது. அவன் வேலியை பனைமட்டைகள் கொண்டு அறுக்கையாக அடைத்திருந்தான். பனை மட்டைப்படலையில் காணப்பட்ட நீக்கலைச் சுந்தரம் செப்பமிடுவது சுப்பையாவுக்குத் தெரிந்தது. பனைமட்டை அடிகளை வெள்ளம் குளிப்பாட்டியது. சுந்தரத்தின் குடிசையை அடுத்து அவன் சொந்தக்காரர்கள் குடிசை அமைத்திருந்தார்கள்.

வெள்ள நீரைக் கிழித்துக்கொண்டு ஒழுங்கையால் மீன்கார சின்னையனின் பெட்டி கட்டின சயிக்கில் செல்வது தெரிந்தது. சுந்தரத்தின் படலையில் சயிக்கிலை நிறுத்தினான்.

"வெள்ளம் போட்டாலும் நீ வியாபாரத்தை விடமாட்டாய்?"

"என்ன செய்யிறது சுந்தரம். வயிறு என்று ஒன்றிருக்குதே?... இப்ப தான் பொன்னுத்துரையர் வீட்ட போட்டு வாறன்... இனிச்சுப்பையர் வீட்டட போகவேணும்...நல்ல பாரைத் தலை அகப்பட்டுது. உனக்கெண்டு கொண்டுவந்தன்... நண்டுச் சூக்காயுமிருக்கு... கூழ் காய்ச்சலாம்...மழைக் குளிருக்கு சூடாய்க் குடித்தால் ஒடியல் கூழ் நல்லா இருக்கும்"

சத்தம்கேட்டு சுந்தரத்தின் மனைவி பரிமளம் வெளியே வந்தாள். சின்னையனின் வியாபாரம் நிறைவேறியது.

வெளியே மழை இடைவிடாது தூறிக்கொண்டிருந்தது. பரிமளத்திற்கு இன்று ஞாயிற்றுக் கிழமை என நினைவு வந்தது. ஞாயிறு என்றதும் ஆச்சி தருகின்ற ஒடியல் கூழின் சுவை நாக்கில் ஊறியது. ஆச்சியின் கைப்பதம் அவளுக்கும் வந்திருந்தது. ஞாயிறு வந்தால் போதும் கூழ் காய்ச்சுவதற்கான ஆயத்தங்களில் ஆச்சி இறங்கிவிடுவாள். வழக்கமாகக் கூழ் காய்ச்சும் குண்டான் பானை கழுவித் துப்பரவாக்கி அடுக்களைக்குள் வந்துவிடும். அப்பு தவறாது கூழிற்குத் தேவையானவற்றை பெரிய உமலில் வாங்கிவருவார். அதற்குள் மரவள்ளிக்கிழங்கு, பயிற்றங்காய், பலாக்கொட்டை, நண்டு. வெட்டித்துப்பரவுசெய்த பாரைமீன் தலைப் பகுதியுடன். கணிசமான அளவு இறால், ஒரு திருக்கைத் துண்டுக் கீறல் என்பன பிரதானமாக இருக்கும். ஆச்சிக்கு இறால் அதிகமாகக் கூழில் இருக்க வேண்டும். திருக்கை பட்டும் படாமலும் இருக்க வேண்டும். அப்புவுக்கு மீன் தலைத் துண்டுகள் இருக்க வேண்டும்.

குண்டானை கால் படி அரிசியுடன் நீரை வார்த்து அடுப்பில் அவியவிட்டுவிட்டு ஆச்சி மற்ற வேலைகளை அவதானிப்பாள். அவள் முன் சில சட்டிகள் பரப்பப்பட்டிருக்கும் ஒரு ஏதனத்தில் காய்கறிகள், மரவள்ளிக் கிழங்கு, பலாக் கொட்டை, பயிற்றங்காய் என்பன இருக்கும். இன்னொரு சட்டியில் ஓடு கழற்றி துப்பரவு செய்யப்பட்ட நண்டுத் துண்டுகள், மீன் துண்டுகள், திருக்கைத்துண்டுகள் என்பன இருக்கும். இன்னொரு சட்டியில் கரைத்த புளி, கரைத்த ஒடியல் மா தயாராகக் காத்திருக்கும். இன்னொரு ஏதனத்தில் அரைத்த மிளகாய்த் திரணை இருக்கும். அரிசி வெந்ததும் ஆச்சி மரக்கறிகளை குண்டானில் இடுவாள். பின்னர் அசைவங்கள். மிளகாய் கூட்டு உப்பு, புளி விட்டு அவிய விடுவாள். இவை அவிந்ததும் கரைத்த ஒடியல் மாக்கரைசலை விட்டுக் கிளறிக்கொதிக்க விடுவாள். ஒடியல் கூழ் அடுப்பில் கொதிக்கும். பேரன் முற்றத்து பலாவில் இலைகளைப் பொறுக்கி கோலி ஈக்கில் குத்தி வைத்திருப்பான். பலா இலைகளில் தான் கூழைக்குடிக்க வேண்டும். பலாவிலையின் பால் சூட்டில் அவிந்தால் தான் கூழ் சுவைக்கும் என்பது ஆச்சியின் நம்பிக்கை.

"அப்புவைக் கூப்பிடுங்கோ.." என்றால் கூழ் தயார் என அர்த்தம். அக்குரலுக்காக எல்லாரும் காத்திருப்பார்கள். தான் பலாவிலையும் கையுமாக ஓடியது இன்றும் சுந்தரத்துக்கு நினைவு வருகிறது.

வெளியே மழை விடாது தூறிக் கொண்டிருந்தது. ஒரு கிழமையாக வானம் அழுது கொண்டிருக்கிறது. தூரத்தில் ஷெல் ஒன்று வெடித்துச் சிதறியது. “தொடங்கிவிட்டான்கள்” என்று மனைவி புறுபுறுத்தாள். துப்பாக்கிச் சன்னாங்களின் ஓசை அவளுக்குப்பழகிவிட்டது.

உள்ளே போன சுந்தரம் குடிசைக்குள்ளிருந்து வெளியே வரும்போது ஏறுபட்டி, தளநார். இயமனக் கூறுடன் வெளிவந்தான். முட்டி ஒன்றைக் கொளுவிக் கொண்டான். தொழிலுக்குப் புறப்பட்டான்.

தென்கிழக்கு வானம் இன்னமும் இருண்டு கிடந்தது. மழைத் துளிக்குப் பயந்து கூட்டிற்குள் அடங்கிக் கிடந்த காகங்கள் இரண்டு ஏதாவது கிடைக்குமா எனப் புறப்பட்டு வேலியில் அமர்ந்து இருந்தன. நித்தம் முற்றத்தில் அலைந்தது புழு. பூச்சிகளைத் தேடும் மைனாக்கள் இரண்டையும் வெள்ளத்துள் காணவில்லை.

“என்ன இடிஞ்சுபோய் இருக்கிறியள் நயினார்?” நிமிர்ந்தபோது எதிரில் தொழிலிற்கு ஆயத்தமாக சுந்தரம் நிற்பதைச் சுப்பையா கண்டார். குளிர் காற்று ஊசிகளாக உடலில் ஏறியது.

“இந்த மழையுக்க சீவப் புறப்பட்டிருக்கிறாய்? பனை வழுக்கவெல்லோ போகுது?’

“சீவாமல் என்ன செய்யிறது...கோபரேஷனுக்கு கள்ளுக் கொடுக்க ரெண்டு மூண்டு பனையாவது ஏறவேணும் வாடிக்கையாளர் இரகசியமாக வருவினம்... உங்களை எடுத்துக் கொள்ளுங்கள். இராவைக்கு வருவியள். இல்லை என முடியுமே?”

“இந்த மழையோடு எல்லாம் போச்சுதடா சுந்தரம்... ஒரு கிழமைக்கு முன் நானும் நீயும் மினக்கிட்டு போயிலைப் போறனையைத் திருத்தியது தான் மிச்சம்...” சுப்பையாவின் விழிகள் வளவுக்குள் புகையிலைக் கொட்டில் பக்கம் திரும்பி நிலைத்தன.

இந்த முறை சுப்பையாவின். புகையிலைத் தோட்டம் நல்லா இருந்தது. . ஒவ்வொரு பொயிலைக் கன்றும் மதமதத்து வளர்ந்திருந்தது. கண் பட்டிடும். ஒவ்வொரு இலையும் ஒவ்வொரு வாழையிலை மாதிரிக் கிடந்தது. பக்குவமாக மருந்தடிச்சு வளர்த்திருக்கிறார்.

‘இம்முறை ஒரு பொயிலைக் கன்றுக்கு முந்நூறு கேட்டிருக்காம். சுப்பையர் அதுக்கும் விக்க மாட்டாராம். தீன் பொயிலையாக்கி விற்கப் போறாராம். அதுக்காக அந்தாள் வீட்டுப் பொயிலைப் போறணையைக் கூட துப்பரவாக்குகிறாராம்.’ பலர் பேசிக் கொண்டார்கள்.

“போறணைக் கொட்டில் கூரை ஓலைகளைக் கழற்றி ஒரு பக்கமாக அடுக்கி வையுங்கள். அடுத்தமுறை தோட்டத்துக்கு தாக்க வேண்டும்..”

போறணை வட்ட வடிவமானது. ஐந்தடி உயரமான சுவர்களையும் கிழக்குப் பக்கத்தில் ஓராள் உள் நுழையக் கூடிய வாசலையும் கொண்டது. கூரை தட்டையாக மண்ணால் தடிபரப்பி பிளாற் பண்ணப்பட்டிருந்தது. அறுவடை செய்யப்பட்ட புகையிலையைத் தொங்கவிடுவதற்காகக் கூரையோடு அரை அடி இடைவெளியில் நல்ல பலமான நேரான காட்டுத் தடிகள் பொருத்தப்பட்டிருந்தன. அன்று முழுவதும் போறணை பூசி மெழுகப்பட்டது. வெடிப்புகள் அடைத்து செப்பமிடப்பட்டன. கூரை வேய்ந்த பின்னர் போறணை பூசி மெழுகப்பட்டது. அதனைப் பார்க்கப் புது மணப்பெண் போலப் காணப்பட்டது, அறுவடை முடிந்த கன்றுகளை உணர்த்துவதற்காக அவற்றை வெயிலில் போட வேண்டும். அதற்கான கொடிகளை வீட்டுப் பனைகளை இணைத்துக் கட்டுவதற்காக மட்டக்களப்பு தடக் கயிறுகள் வாங்கியிருந்தார். புகையிலைப் போறணையில் முதலில் வெயிலில் உணர்த்திய புகையிலைகளைத் தொங்கவிட்டு புகையூட்டுவதற்காக இரண்டு லோட் தென்னம்பொச்சு மட்டைகளைப் பறித்து வைத்திருந்தார். இவ்வளவு முன்னேற்பாடுகளை அவர் செய்திருந்தார்.

“நாளைக்கு வெள்ளனவே வந்திடுங்கோ. வெயில் ஏறுவதற்கு முன்னர் வெட்டிவிட்டு உலரவிடவேண்டும்.”

“ஒரு தரத்தில உங்கள் பொயிலை போறணையில் கொள்ளுமே அண்ணை.?

"இரண்டு முறை வேணும். அதற்கேற்ப வெட்டுவம் மாணிக்கம். மழை வரு முன்னர் வெட்ட வேணும் இம்மாதக் கடைக்கூற்றில நல்லதொரு மழையை எதிர்பார்க்கலாம். மழைபெய்தால் இலைகளில இருக்கிற பாணி கழுவப் பட்டுவிடும். பிறகு அந்தப் பொயிலைக்கு மதிப்பில்லை கண்டியோ.... பேரைக் காப்பாற்ற வேணும். தீன் பொயிலைக்கு தாவடியில சுப்பையாவை ஒருவனடிக்கக் கூடாது."

"இப்படி போறணை கட்டி மினக்கெடுகிறதிலும் கன்றாக வித்து எப்பவோ பயன் எடுத்திருக்கலாம் கேட்க மாட்டன் என்றிட்டியள். அவனவன் தான் செய்யிற தொழிலோட நிக்க வேணும் அங்கால போகக் கூடாது. நாங்கள் பொயிலை செய்யிறமே? என்னட்ட மூன்று போறணை இருக்குது பொயிலை போடதரமாட்டன் நான் செய்யிறன் என்றிட்டியல்."

"குறை எண்ணாதை பொன்னு..என்ர குமரைக் கரை சேர்க்கக் கொஞ்ச காசு தேவை.."

"சும்மா காசு காசென்டு சாகாதை.:"

எல்லாம் மழையோடு கனவாகிப்போய்விட்டன.

'எங்கட பக்கத்தில எல்லாற்றை குடிசைக்குள்ளும் வெள்ளம் போட்டுது. பொன்னப்பன். காடைகனகு எல்லாற்ற குடிசைகளும் விழுந்திட்டுது.. எல்லாரும் ராவோட ராவா பள்ளிக்கூட கட்டடத்துக்கு ஓடிப்போட்டினம். இன்டைக்கு ஒரு மழை பெய்தால் காணும் என்ரை கொட்டிலும் சரிஞ்சிடும்...எல்லாம் மனிசருக்குத் தான். இதென்ன நயினார் உங்க வீட்டுத் தலைவாசல் குந்தும் சரிஞ்சிட்டுது? திண்ணையோடு தண்ணிதட்டுது... இண்டைய மழையோட வீட்டிற்குள்ள போகும். உமக்கென்ன வெள்ளமெண்டால் பொன்னுத்துரையர் வீட்டிற்கு ஓடுவியள்." சுந்தரம் விடைபெற்றான். போகும் போது, "ஏலு மெண்டால் ஒரு ரெண்டு மணிக்கு வீட்டுப்பக்கம் வரச்சொல்லி பரிமளம் சொன்னாள். ஒடியல் கூழ் காய்ச்சுறம் வாரும்..."

மழை தூறிக்கொண்டிருந்தது. கவலை வரப்பட்டவராக சுப்பையா இருந்தார். சுந்தரம் வந்ததும் அவருடன் பேசியதும் உள்ளே கதவருகில் பாயில்

படுத்திருந்த அன்னத்தின் காதுகளில் தெளிவாக விழுந்தன. கடைசி அழைப்பும் கேட்டது.

“நல்லா இருக்குது? சுந்தரம் வீட்டை நக்கப் போறியளோ? அவயள் யாராக்கள்? எங்கட சாதி சனமே? ஆருக்கும் தெரிஞ்சால் மதிப்பினமே? கள்ளுக் குடிக்கிறது காணாதெண்டு இப்ப... நல்லா இருக்குது?”

“சுந்தரம் வீட்டில வளர்கிற மாடுகளில கறக்கிற பால் வாங்கலாம். பனை தென்னையில சீவுற கள் குடிக்கலாம்... அதுகளில குத்தமில்லை..” என்றபடி தேநீர் பேணியுடன் குசினிகுள்ளிருந்து கிளி வந்தாள்.

“இப்ப சாதி பார்க்கிறதே? இல்லை இயக்கத்தில இப்ப அவங்கள் தான் பிரதேசங்களுக்குத் தலைவர்கள். தெரியுமே?’ என்றபடி மணிவண்ணன் எழுந்து வந்தான்

மழை தூறத்தொடங்கியது.

# 3

கலட்டி அம்மன் கோவில் தெற்கு மூலையில் அமைந்துள்ள ஆறுமுகத்தின் சுறுட்டுக் கொட்டில் ஊரில் பெருமை கொண்டது. 150 பேர் ஒரே வேளையில் அமர்ந்து சுறுட்டு சுத்துவார்கள். அவ்வளவு பெரிய 'ட" வடிவக் கொட்டில். அக்கொட்டிலின் கிழக்குப் பக்க ஒழுங்கை மூத்திர ஒழுங்கையாகும். எவ்வளவு சொல்லியும் பயனில்லை. சுருட்டுத் தொழிலாளர்கள் இடைநடுவில் தமது சிரமங்களைத் தீர்க்க குந்தியெழும்பும் இடம் இந்த ஒழுங்கையின் வேலிக்கரை தான். கணேஸ் கோடா காய்ச்சிய பின்னர் அடுப்புச் சாம்பலை இந்த வேலிக் கரையோரம் மலையாக எவ்வளவு கொட்டியும் இந்த நாத்தத்தை அகற்ற முடிவில்லை. 'நாய்கள் சிறு நீர் கழிக்குமிடம்' எனக் குறும்புக்காரப் பையன் ஒரு மட்டையில் எழுதி, அந்த வேலியில் கொளுவியும் பயனில்லை. மூக்கைப் பொத்திக் கொண்டுதான் பயணிக்க வேண்டும். பெண்ணாயின் குந்தியவன் எழுந்து கோவணத்தைச் சரி செய்யும் வரை காத்திருக்க வேண்டும்.

மாநகர சுகாதாரப் பகுதியினர் சொன்னதற்காக மலசலகூடம் ஒன்றை வளவிற்குள் ஆறுமுகம் முதலாளி அமைத்திருந்தபோதிலும் பயன்படுத்துவாரில்லை. எப்போதாவது கோடா காய்ச்சும் கணேஸ் பயன்படுத்துவான். அவ்வளவு தான். கொட்டிலைக் கூட்டி பாய்களை விரித்து சுருட்டுத் தொழிலாளர் அமர ஆயத்தம் செய்து கொண்டிருந்த கணேசு தனக்குப் பின்னால் ஆறுமுகம் முதலாளி வாயில் கோடாச் சுருட்டுடன் வந்து நின்றதை அவதானிக்கவில்லை.

"பாயெல்லாம் போட்டாச்சா... கனகரெத்தினத்தை இன்னமும் காணம்."

“வந்திடுவார் ஐயா... கனகரெத்தினம் ஐயா வந்திடுவார்..”

கணேஸ் சொல்லி முடிப்பதற்கு இடையில் கனகரெத்தினம் படலையைத் திறந்துகொண்டு உள்ளே வந்தார். அந்தச் சுருட்டுக் கொட்டிலின் வெட்டுக்காரர் அவர். அளவு கட்டையை வலது கரத்தில் எடுத்து அதே கரத்தால் சுருட்டை எடுத்து படக் படக்கென கத்தரிகோலால் வாலையும் நுனியையும் கத்தரிப்பார். சுருட்டுகளைக் கத்தரிப்பதும் காலையில் சுருட்டுபவர்களுக்கு உள்ளிலை தூள் என்பனவற்றையும் அதனைச் சுற்ற காப்பிலையையும் அளவாக எடுத்துக் கொடுப்பதும் வெட்டுக்காரரின் பணிகள். உள்ளிலையாக கொடிகாமத்து ஒடிசருகையும் காப்பிலையாக தாவடிப் புகையிலையையும் பயன்படுத்துவார்கள்.

அளவு கட்டை கத்தரிக்கோலே கனகரெத்தினம் வந்து சுருட்டுபவரின் முன் அமர்ந்தால் சுருட்டுபவருக்கு மெதுவான நடுக்கம் எடுக்கும். அளவுகட்டை, கைப்பிடி அளவில் சுருட்டின் நீளம். தடிப்பு என்பனவற்றைத் துள்ளியமாகக் கணிக்கவும் அக்கொட்டிலின் பிரமாணத்திற்கு அடங்காதவற்றைத் தள்ளிவிடவும் அவரால் முடியும். சிலருக்கு 100 சுருட்டுகள் வரை தள்ளப்பட்டு மீண்டும் கழற்றி சுற்ற வைக்கப்படுவதுமுண்டு.

“இன்றைக்குக் கோடா காய்ச்சுற நாள்... கணேஸ். மறந்திருக்க மாட்டாய்..”

“மறக்கவில்லை... நேற்றைக்குப் பின்னேரமே கோடா அடுப்பில கோடா காய்ச்சற பாத்திரத்தை வைச்சிட்டன் அது நிறைய புகையிலைக்காம்பை இட்டு ஊறவும் வைச்சிட்டன். அடுப்பு மூட்ட வேண்டியது தான் பாக்கி... நல்லாக் கொதிச்சதும் சொல்லுறன்... நீங்கள் அதுக்குள்ளை போடுற சரக்கைப் போடுங்கோ..” என்றான் கணேசு.

சுருட்டுக்காரர் எல்லாரும் வந்துசேர்ந்தார்கள் அவர்களோடு மணியத்தாரும் வந்தார். ட வடிவக் கொட்டிலின் நடுவிலிருந்து அன்றைய தினசரி ஒன்றை முதலில் குரலெடுத்துப் படிப்பார்

பின்னர் அன்று படிக்கிற புராணத்தை இராகத்தோடு வாசிப்பார். அவர் வாசிப்பதைக் கேட்டுக் கொண்டே அனைவரும் சுருட்டுவார்கள்.

"கொக்குவில் கொட்டில்களில் ரேடியோ பாட வைத்திருக்கினம்... இனி எவ்வளவு காலத்திற்குத் தான் மணியத்தாற்றை வாசிப்பை கேட்கிறது..." என்பான் சின்னராசா.

அதைக்கேட்ட மணியத்தார், "கத்தாதையடா என்ரை பிழைப்பில மண்ணைப் போடாதை..." என்பார்

"எல்லாரும் சுத்தி உங்களுக்கும் ஒரு கூலி இனித் தரேலாது. நீங்களும் இனிச் சுத்துங்கோவன். மூணாவிட்ட சொல்லப் போறன் ஒரு ரேடியோ பெட்டி வாங்கி வைக்கும் படி."

"இனி புதுக்க சுத்துறதெண்டால் முந்நூறு கூட தேறாது கண்டியோ." மணியத்தாரின் குரல் கெஞ்சியது.

கணேசுக்குத் தெரியும் அவன், வெட்டுக்காரர், புராணம் படிக்கிறவர் ஆகிய மூவரும் வெவ்வேறு தொழில் பார்க்கிறவர்கள். நாட் கூலிகள். ஒவ்வொரு சனிக்கிழமையும் சின்னாச்சி சுருட்டுக் கொட்டிலை சாணமிட்டு மெழுகி விடுவாள். ஒவ்வொரு நாளும் கொட்டிலைக் கூட்டி பாய் விரித்து விடுவதும் அவன் வேலை முடிந்ததும் பாய்களைச் சுற்றி வைப்பதும் அவன் வேலை. கிழமைக்கு ஒரு நாள் கோடா காய்ச்சுவதும் பதினைந்து சன்லைற் பெட்டிகளில் காய்ந்த வாழை மட்டைகளைப் பரப்பி அடுக்கிக் கட்டிய சுருட்டுப் பெட்டிகளை ஆறுமுகத்தின் பார வண்டிலில் ஏற்றி கொக்குவில் புகையிரத நிலையத்தில் குருநாகலுக்கும் வறக்காபொலவிற்கும் மகோவிற்கும் அனுப்பப் பாரம் கொடுப்பதுமாகும். அப்பெட்டிகளில் எட்டுக்கு மேல் வாரத்திற்கு வாங்கிக் கொள்வது வறக்காகப்பளை காசிம்காக்கா தான் அவரிடம் பதினாறுக்கு மேற்பட்ட சைக்கிளோடிகள் இருந்தார்கள் தமது சைக்கிள்களில் வழியோடி சிங்கள நாட்டுப்புறங்களுக்கு யாழ்ப்பாணக் கோடாச்சுருட்டை எடுத்துச் சென்று பரப்பி விற்பது அவர்களாகும். புகையிரதம் மூலம் ஒரு தடவை சுருட்டுப் பெட்டி செல்ல தவறிவிட்டால் அவர்களது வழியோடல் பாதிக்கப்படும்.

"உங்கட பெட்டி வராவிடில் வியாபாரம் பாதிக்கும். இது தொடர்ந்தால் நாங்களே சுத்தத் தொடங்கிவிடுவம். ஆனால் இந்த ஆறுமுகம் பெஷல் கோடாதான் போடத்தெரியாது.. நீ வறக்காபொலவுக்கு வந்துவிடன் கணேசு.."

என்று யாழ்ப்பாணத்திற்கு வரும் காசிம் காக்கா கேட்பதுண்டு. பகிடிக்கு அவர் கேட்கவில்லை என்பது அவனுக்குத் தெரியும்

“கோடா காய்ச்சத்தான் எனக்குத் தெரியும் காக்கா.. அதில இரகசியமாகச் சரக்கைப் பேடுறது முதலாளிதான்.. அவர் போடுற சரக்கில்தான் ஆறுமுகம் கோடாவின் மகத்துவமே இருக்குது..”

ஆறுமுகத்தாருக்கு எழுபது வயதிருக்கும். ஆரோக்கியமான உடம்பு. சாதாரண சுருட்டுத் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்தவர் படிப்படியாக முன்னேறி ஒரு கொட்டிலுக்கே உரிமையுள்ளவரானார். தனது இரண்டு பிள்ளைகளையும் கரை சேர்த்துவிட்டார். ஒருத்தி சுப்பையாவின் மனைவி. வதவதவென்று ஐந்து பிள்ளைகளைப் பெற்றுவிட்டாள். இடைக்கிடை ஆறுமுகத்தார் மகளுக்கு உதவுவதுண்டு. வசதியான பகுதியில் மகளைக் கட்டிக்கொடுக்க அவர் விரும்பினார். விரும்பிஎன்ன பயன்? சுப்பையாவைத்தான் கலியாணம் செய்வேனென மகள் பிடிவாதம் செய்தாள். அவள் எண்ணப்படி திருமணம் செய்து வைத்தார். தனது ஒரே மகன் பொன்னுத்துரையை தனது எண்ணப்படி தங்கை மகளுக்கே கட்டிவைத்தார். இப்போது வயதான காலத்தில் மனைவியுடன் தனி வீட்டில் சுருட்டுக் கொட்டிலை கவனித்தபடி வாழ்ந்து வருகிறார்.

“புதினம் தெரியுமா முதலாளி” என்றான் கணேசு “மூலைவீட்டு சண்முகத்தாரின்ர மகளுக்கு இயக்கத்தில.”

“ஓம்… அவளுக்கென்ன?”

“அவவுக்கு இண்டைக்குக் கலியாணம் காம்பில. மாப்பிள்ளைப் பொடியன். நம்மடை பரியாரி நாகலிங்கத்தின்ர மோனாம். இப்ப சாதி சனம் பாக்கினமே?”

“கலிகாலம்… இதுக்கு ஒத்துக்கொள்ளேலாது… உலகம் போற போக்கு? இனி அவயளைப் பிடிக்கேலாது… இதொண்டு தான் மிச்சம்… ”

“விசர் கதையள் கதைக்கிறியள்? இப்ப வெளிநாடுகளில நடக்காததே? பணம். படிப்பு, பதவி என ஒதுக்கி வைச்சியள். அவற்றைத் தேடிக்கொண்டினம்.

ஒன்டாக் கலியாணம் செய்தால் என்ன? குறைஞ்சா போயிடுவம்? இப்ப சுந்தரத்தின்ர மூத்த மகன் பட்டதாரி... வாத்தி வேலை பாக்கிறான். குலத்தொழிலே செய்யிறான்? வேலணை சபாபதி சாஸ்திரியின் மகன் கனடாவில லோன்றி நடத்திறான். தள்ளியே வைச்சிட்டம்? இன்ரநெற்றில காதல் கொண்டு கலியாணம் செய்த சோமற்றை மோள் கலியாணம் செய்தது ஆரை? ஒரு சலூன் பொடியனை. இதுகளைச் சொன்னால் இங்க இருக்கிற தலித் எழுத்தாளர் ஒப்புக்கொள்ளாயினம். உம்முடை வீட்டில செய்யுங்கோ என்பினம். கலியாணம் என்பது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது... கட்டாயப் படுத்தி வராது..."

"என்டாலும் வேறு சாதிகளுக்க செய்யறதே?"

"உதை வெளியில கதைக்காதையுங்கோ... கொண்டு போய் தட்டி விடுவாங்கள்.."

தொடர்ந்து கொட்டிய மழை வெள்ளம் போட்டிருந்தது. பிள்ளைகளைப் பார்த்து வர ஆறுமுகத்தார் புறப்பட்டார்.

கோயில் வாசலில் பரராசசிங்கம் நின்றிருந்தான். ஆறுமுகத்தாரைக் கண்டதும் ஊர்ப்புதினம் சொன்னான்.

"விசயம் கேள்விப்பட்டியளே... வேலும்மயிலும் வீட்டில ஒரே கலவரமாம். வேலும்மயிலாற்றை இரண்டாவது மகன் ஆரோ ஒரு பொடிச்சியைக் காதலிச்சானாம். அவள் நாங்கள் செம்பு எடுக்காத பகுதியாம். தேப்பன் ஒத்துக் கொள்ளவில்லை . கைகளுவி விடப் பாத்திருக்கினம். பொடிச்சி கெட்டிக்காரி.. இயக்கப் பொடியளின்ர காம்பிற்குப்போய் முறைப்பாடு கொடுத்திட்டாள்... உடனை இயக்கப் பொடியள் இப்ப கொஞ்சம் முந்தி துவக்குகளோட வந்து பொடியனை அள்ளிக் கொண்டு போயிட்டினமாம்.."

ஆறுமுகத்தார் திகைத்துப்போனார்.

"தாய் தேப்பனின்ர விருப்பின்றி செய்வினமே?"

“என்ன விசர் கதை பேசிறியள்? தாய் தகப்பனைக் கேட்டே காதலிச்சவை? இப்ப ரெண்டு பேருக்கும் கலியாணம் முடிஞ்சிருக்கும்.”

“காலம் கெட்டுப் போச்சுது..”

“நீங்கள் சொல்வது சரி தான்... இல்லாவிட்டால் காலம் தப்பி இப்படி வெள்ளம் போடும் அளவிற்கு மழை பெய்யுமே? பருவம் பிந்திப் போச்சுது...”

ஆறுமுகத்தார் முதலில் மகள் அன்னம் வீட்டிற்குப் போனார். போகிற தெரு எங்கும் வெள்ளம் தேங்கிக் கிடந்தது. சுப்பையாவின் பனங்காணியைப் பார்க்க நெஞ்சு பதறியது. திண்ணை விளிம்பை முற்றத்து வெள்ளம் இன்றைக்குத் தாண்டிவிடும். தலைவாசலின் ஒரரைப் பக்கத் திண்ணைக் குந்து வெள்ளத்தில் சரிந்து கிடந்தது.

வீட்டிற்குள் ஒருவரையும் காணோம். சுற்றி வர நோட்டம் விட்டார். பனங்காணி எல்லையில் சுந்தரத்தின் வீட்டுப் படலையின் முன்னால் இரண்டு உருவங்கள் தெரிந்தன. ஒன்று சுந்தரத்தின் மூத்த பட்டதாரி மகன் சின்னராசு. மற்ற உருவம் அவருடைய பேத்தி கிளி.

# 4

மழை தொடர்ந்து பொழிந்தது. முற்றத்து வெள்ளம் வீட்டு அறைகளுக்குள் புகுந்துவிட்டது. சுந்தரத்தின் குடிசை நிலத்தை முத்தமிட்டபடி சரிந்து பிரண்டது. இரவோடிரவாக பாடசாலைக் கட்டடத்துக்கு சுந்தரம் குடும்பத்துடன் அகதியாக இடம் மாறிவிட்டார்கள். பாடசாலைக் கட்டடங்கள் வெள்ள அகதிகளால் நிரம்பி வழிந்தன. மக்கள் அவதிப்பட்டார்கள் சுப்பையா வீட்டிற்குள்ளும் வெள்ளம்.

சுப்பையாவின் பிள்ளைகள் அவரைப் பார்த்தன. இரவு பாய் விரிக்கக் காய்ந்த நிலமில்லை.

“அன்னம், பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு கொண்ணை வீட்டை போ... அவயின்ர வெளித்திண்ணை எங்களுக்குக் காணும். பகலில இங்க சமைக்க வந்திடுங்கோ.. நான் எங்கட தலைவாசல் வாங்கில ராவைக்குப் படுக்கிறன். இந்த தண்ணிக்குள்ள பிள்ளையளை வைச்சிருக்க இயலாது.”

அவருடைய மூத்த மகன் மணிவண்ணன் சயிக்கிளில் வந்திறங்கினான்.

“வெள்ள அகதிகளை விதானையார் சங்கரலிங்கம் பதிகிறார். பள்ளிக்கூடத்தில் உள்ளவர்களைப் பதிந்து பராமரிக்க சுந்தரத்தின் மகன் சின்னராசுவையும் நம்முடைய கிளியையும், மச்சான் இரத்தினராசாவையும் விதானையார் போட்டிருக்கிறார். எல்லாருக்கும் சமைச்ச உணவுப் பார்சல் கொடுத்தவை. வெள்ளத்தால பாதிக்கப்பட்ட மற்றாக்களை நானும் சின்ன

மச்சான் மாணிக்கனும் பதியுறம். எங்கட குடும்பப் பேர்களும் அதில் உள்ளன. எங்கட பிரிவில் 3057 பேர் எல்லாமாக 390 குடும்பத்தினர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கினம்... விதானையார் பின்னேரம் மாமாவை சந்திக்க வாறாராம்..."

அப்பிரதேசக் கிராம சேவையாளர் சங்கரலிங்கத்திற்கு நடுத்தர வயதிருக்கும். அவரது இளமீசையும் வெள்ளை வெளேர் என்ற வேட்டியும் உடல் கம்பீரமும் பார்ப்பதற்கு இளைஞர் போல எண்ணவைக்கும். அவர் வீட்டிற்கு வருவாரெனப் பொன்னுத்துரையரோ ஆறுமுகத்தாரோ எண்ணவில்லை. அவரைக் கண்டதும் சற்றுத் திகைத்து விட்டனர்.

"வாருங்கோ விதானையார்... இருங்கோ..."

"ஆரும் எதிர்பார்க்காத மழை... இப்படி வெள்ளம் போடும் என்று எதிர்பார்க்கவில்லை. 300 வீடுகள் நிலத்தோடு விழுந்திட்டுது.. ஆயிரத்துக்கு மேல அகதியாகி விட்டினம். நிவாரணம் கொடுக்கப் போறம்... எங்க சுப்பையா அண்ணரைக். காணம்? மணிவண்ணன் இருப்பதாகச் சொன்னான்?" என்றபடி திண்ணையிலிருந்த கதிரையில் சங்கரலிங்கம் அமரமுயன்றார்.

"உள்ளே ஹோலுக்க வந்து அமருங்க விதானையார்.." என்று தடுத்தார் பொன்னுத்துரை. விதானையார் உள்ளே வந்தார். தேனீர் தம்ளருடன் அவரின் மனைவி வந்தாள். தனது குடும்பத்தை அவர் அறிமுகம் செய்துவைத்தார்.

"எனது மூத்த மகன் இரத்தினராசா பள்ளிக் கூடத்துக்குப் போட்டான். இது எனது மூத்த பொடிச்சி ராசாத்தி அவன் ரெண்டாவது பொடியன் மாணிக்கராசா. உவள் கடைசி மகள் ராணி... அவளுக்கு முதல் ஒரு பொடிச்சி தேவராணி"

"சுப்பையா அண்ணர் குடும்பத்தை உள்ளே வந்து இருக்கச் சொன்னன். அன்னமக்கா மறுத்திட்டா.. திண்ணையில இருக்கிறம் என்றிட்டா... சுப்பையா அண்ணர் அங்க இருக்கிறாராம். அந்த மழைக் குளிருக்கை..." என்று பொன்னுத்துரையின் மனைவி பாக்கியம் குறைப்பட்டார்.

“சுப்பையாண்ணை அப்படித்தான். அது சரி நிவாரண அகதிகளைப் பதிய உங்கட மாணிக்கராசாவையும் இரத்தினராசாவையும் எடுத்திருக்கிறன்.”

அதுவரை அமைதியாக இருந்த ஆறுமுகத்தார் குறுக்கிட்டார்.

“அதிலை ஒண்டுமில்லை விதானையார்... பிரச்சினை ஒண்டும் வராதே?”

“என்ன பிரச்சினை? ஓ... நீங்க அதைச்சொல்லிறியளா? அதிலென்ன இருக்குது? எப்பவும் போல பத்து சத வீதம் கூடுதலாக பேர் சேர்க்க வேணும். அது இயக்கத்துக்கு. “எம்.பி.சி. எஸிடம் பணமாக அல்லது பொருளாக வாங்கிக் கொள்ளுவினம்...” என்றார் சங்கரலிங்கம் அமைதியாக.

‘அவயள் பத்தென்றால் நீங்களும் ஒரு ஐந்தைச் சேர்த்துக் கொள்ளலாம்...’ என ஆறுமுகத்தார் தனக்குள் எண்ணமிட்டார். ‘அதற்குப் பெயரிட வசதியாகச் சொல்லாமற் கொள்ளாமல் வெளிநாடுகளுக்கு ஓடியவர்களின் குடும்ப அட்டைகளுனுள்ளனவே? அவயின்ர உலருணவு அட்டைகளும் உங்களிடம் தானே? 300 ரூபா பெறுமதியான பத்து அட்டை இருந்தாலே போதுமே? ஓடிற் ஆரும் தெற்கிலிருந்து இதனை ‘செக்’ பண்ண புலிகளின் பயத்தால் வடக்கே வரமாட்டினம். அடித்தது யோகம்...’

“யாழ்ப்பாணதிலஉலர்உணவுஅட்டைவிசயமாகரெண்டுவிதானைமாரை இதற்காகப் பிடித்து விசாரித்து புலிகள் பங்கரில போட்டவை.. லட்சக் கணக்கில பைனும் வாங்கியவை... தட்டாமல் விட்டிட்டினம்.. இதே சாட்டில ஏஜிஏ க்கும் இருபது பவுனில சங்கிலி போட்டு அந்தாளையும் விதானைமார் மாட்டியவை.. அந்த ஏஜிஏ பேந்து அரசாங்க அதிபராகவும் இருந்தவர். அப்படி ஏதாவது நடந்திடக்கூடாது.” என்றார் ஆறுமுகம்.

“அப்படி ஒன்றும் நடக்காது பயப்படாதையுங்கோ...”

“பள்ளிக் கூடத்தில எல்லாரும் ஒண்டா இருக்கினமே?”

“பின்னை எப்படி இருக்கிறது? உதை எல்லாம் பார்க்க முடியுமே?”

“தங்க ஊசி என்டதுக்காக கண்ணில குத்துறதே விதானையார்? சாப்பிடுகிற கையால அடி கழுவுகிறதே? அவயளிட்ட இப்ப என்னதுக்குப் போறம் வாறம்?” என்று ஆறுமுகத்தார் பொரிந்தார்.

“இதுகளைவெளியிலகதையாதையுங்கோ.. அதுசரிசுப்பையாண்ணைக்கு எத்தனை பிள்ளையள்? மூத்தவன் மணிவண்ணன். மற்றவை...” சங்கரலிங்கம் பேச்சை மாற்றினார்.

“மற்றவ கிளி.. பிறகு பொடியள் கண்ணன்.. கனகலிங்கம்... கடைசி வாசுகி... அதுக்கு முதல் லட்சுமி... ” என்றாள் ராசாத்தி.

அந்த நேரம் படலையைத்திறந்துகொண்டு வெள்ளத்துள் சயிக்கிளைத் தள்ளிக் கொண்டு மணிவண்ணன் வந்தான்.

“ஜி.எஸ். இங்கயே நிக்கிறியள்.. அங்க பள்ளிக்கூடத்தில ஒரு சிக்கல். ராவைக்கு பாண் கொடுக்கிறியள்” கறி வைச்சது சுந்தரம் பகுதி. அந்தக்கறி வேண்டாமாம் என்கிறது சைவக்காரப்பகுதி. சாமானைத் தரட்டாம் தாங்கள் வைக்கினமாம். ‘இப்ப முடியாது போதுமானவளவு காய்ச்சியாகி விட்டது. வேணுமென்றா நாளைக்கு வையுங்க’ என்று கிளி மறுத்திட்டா... அதனால சண்டை பிடிக்கினம்... ஒரு பக்கம் இரத்தினராசா நிற்கிறான் மறுபக்கம் சின்னராசு... நீங்க வாங்கோ... கொளுவிக் கொள்வினம் போலக் கிடக்குது... இரத்தினராசா சின்னராசாவுக்குக் கைநீட்டிவிட்டான் போலக் கிடக்குது. நம்மடை கம்யூனிஸ்ட் வைத்திலிங்கம் மாஸ்ரரும் வந்திட்டார்.”

“அவர் ஏன் வந்தவர்?அவற்றை வீட்டையும் வெள்ளம் போட்டுதாமா?”

“அவற்றை உயர்ந்த கல் வீடு... அடை மழை பெய்தாலும் வெள்ளம் போகாது...விதானையாருக்கு விசயம் தெரியாது, போல... நரியன்குண்டு பனங்கூடல் சிறுபான்மைத் தமிழர் மகாசபை சங்கத்தை வைத்திலிங்கம்

மாஸ்ரர் அமைத்துக் கொடுத்திருக்கிறார். அவர் தான் தலைவர். சின்னராசா தான் காரியதரிசி... தனது சங்க அங்கத்தவரின் நலம் பார்க்க வந்தாராம்... ரெண்டு சமையலுக்கு கிளியைப் போல அவரும் உடன் படவில்லை.

“கிளி மறுத்தது சரி... வெறும் பாணைத் தின்னட்டும். சாதித் தடிப்பு...” என்றார் விதானையார்.

“நீங்க அப்படிச் சொல்லக்கூடாது விதானையார். ஏதாவது கொடுங்கோ சம்பலாவது அரைச்சு சாப்பிடட்டும் “என்று பரிந்தார் ஆறுமுகத்தார்.

வாசலில் கார் ஒன்று வந்து நின்றது.

”அது என்னுடையது... வாடகைக்கு ஓடுது... வரவு பிழையில்லை... டிரைவர் துரைசிங்கம் நல்ல நேர்மையான பொடியன்... கொடிகாமத்துப் பொடியன். எங்களோட தான் இருக்கிறான். கராச்சில் தங்குவான்.” என்றார் பொன்னுத்துரை.

“இப்பவும் நீங்கள் பொயிலை வியாபாரம் செய்யிறியளே?”

“அது தானே தொழில்... இப்பவும் வீட்டில ஒரு பாடம் ஓடி சருகும் ஒரு பாடம் காப்பிலையும் விக்கிறதுக்கு இருக்கு.”

“உன்னட்ட இருக்கே...? அவற்றை நான் வாங்கிக் கொள்ளுறன்... எனக்கு தேவை... கொட்டிலுக்குத் தேவை...” என்றார் ஆறுமுகம். “இண்டைக்கு ஏற்றிவிடு...”

“கொக்குவில் சுப்பிரமணியத்தாரும் கேட்டவர்... நான் உங்களுக்குத் தாறன் அம்மான். இம்முறை ஓடிசருகு இன்னமும் சந்தைக்கு வரவில்லை என தம்பிஜயா அறிவித்தவர்.”

விதானையார் சங்கரலிங்கம் விடை பெற்று பள்ளிக்கூடத்திற்கு வந்த போதும் சலசலப்பிருந்தது.

"இரத்தினராசா இப்படிக் கைநீட்டக் கூடாது... சின்னராசு எங்கட பகுதி எண்டாலும் ஒரு வாத்தி... இரத்தினராசா போல றோட்டளக்கிறவனல்லன்..." என்று கந்தசாமி கொதித்தான்.

"சரி, உதைப்பிரச்சினை ஆக்கவேண்டாம். இங்க எல்லாரும் ஒரே தரத்தினர் தான். வக்கில்லாத வறியவர்கள்... ஒண்டுக்கும் வழியில்லாமல் வீடுவாசல் இழந்து வந்திருக்கிறம்... அந்த விதத்தில் எல்லாரும் ஒண்டு... அதுக்குள்ள சாதிசண்டை... போய் உங்கட அலுவல்களைப்பாருங்கோ..." என்றார் விதானையார்.

"எல்லாம் உங்களால வந்தது சேர். அவங்களையும் இதுக்குள்ள ஏன் போட்டனீங்கள்...? சாதிப்புத்தியைக் காட்டிவிட்டுதுகள். கிளியோடு உவருக்கு என்ன கதை? சிரிச்சு சிரிச்சு வளைக்கிறார்..." என்றான் இரத்தினராசா. விதானையாருக்குப் பிரச்சினையின் மூலவேர் புரிந்தது.

# 5

பாரவண்டிலில் குழைக்கட்டுகள் ஏற்றி அடுக்கி கட்டிவிட்டார்கள். இழுவை மாடுகளும் தயாராகிவிட்டன. அதிகாலை இரவோடு இரவாகப் புறப்பட்டுவிட வேண்டியது தான். வண்டிலின் கீழ் தொங்கிய சாக்கில் இளைப்பாறுமிடங்களில் எருதுகள் சாப்பிட்டு அசைபோடுவதற்காக வைக்கலும் அடைந்தாகிவிட்டது. அரிக்கன் லாந்தரைத் துடைத்து மண்ணெண்ணெய்விட்டு அவரருகில் கொண்டுவந்து அவர் மனைவி பொன்னம்மா வைக்கிறாள். வெளிக்கிடும் நேரம் இருளாக இருக்கும். வண்டிலின் கீழ் துலாவில் கொளுத்தித் தொங்கவிட வேண்டும்.

அக்காலத்தில் பார மாட்டு வண்டில்கள் வகித்த முக்கியத்துவத்தை மறந்துவிட முடியாது. இக்காலத்து லொறிகள் போல பொருட்களை அவை ஏற்றிப் பறித்தன. கூடாரம் போட்ட பார வண்டில்களும் இருந்தன. தம்பலகாமத்து வெள்ளை மாடுகள் அவற்றை நுரை தள்ள இழுத்தன.

“இந்தவாட்டி ஆருக்குக் குழைகொண்டு போறியறள்?”

“உவர் பொன்னுத்துரைக்குத் தான். அவர் குழை வாங்க கமக்காரரை ஒழுங்குபடுத்தியிருப்பார். ஒன்று வாங்குகிற கமக்காரரின்ர தோட்டத்தில பறிக்க வேண்டும். அவ்வளவு தான். ரவுன்னில சின்னம்மா வீட்டில புளியஞ்சருகும்... ஐயர் வீட்டில எருவும் ஒவ்வோர் லோட் இருக்குதாம். அவையும் ஏற்றியிறக்க வேணும் எதுக்கும் நாளையிண்டைக்கு தான் வருவன்” என்றார் தம்பிஐயா.

தம்பிஐயா இணுவில் காலிங்டன் தியேட்டர் முன் தன் குழைவண்டியை நிறுத்தும் போது அதிகாலையாகியது. குழைவண்டிகள் அதிகமாக சாவகச்சேரிப்

பக்கமிருந்தே யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. பருவத்திற்குப் பருவம் பச்சைக் குழையை தமது தோட்ட மண்ணிற்குள் பசளைக்காக வெட்டிப் புதைப்பது யாழ்ப்பாணத்தில் வழக்கமாக இருந்தது. பொதுவாக இணுவிலிற்கே குழை வண்டிகள் வந்தன. அவற்றை விலை தீர்த்து கமக்காரருக்கு வாங்கிக் கொடுப்பதுத் தரகர்கள் ஆவர். அவ்விடத்தில் ஒரு தரகராக பொன்னுத்துரை இருந்தார்.

"அண்ணை நீ சொன்னபடி இம்முறை பாவட்டை அதிகமாகக் கொண்டு வந்திருக்கிறன் பூவரசும், வேம்பும் கலந்திருக்குது... ஆராருக்கு தீர்த்து வைத்திருக்கிறியள்?"

"இப்ப தோட்டம் எல்லாம் வெள்ளம்... குழை தாழ்ப்பினமோ தெரியவில்லை.."

தீத்த தோட்டங்களில் பறித்துவிட்டுத் திரும்ப நண்பகலாகிவிட்டது. பொன்னுத்துரை தம்பிஜயாவை தன் வீட்டிற்கு சாப்பிட அழைத்துப் போனார்.

"எப்ப பார்த்தாலும் இந்த ஆளை அழைத்து வாறிங்கள். உங்கட வியாபாரங்கள் றோட்டோட இருக்க வேணும்... குழைக்காட்டான். ஒத்து வருமே. நாங்க சபை சந்தியில செம்பெடுக்க மாட்டம்." என்று அவர் மனைவி பொரிந்து தள்ளினாள்.

"தெரியாத மாதிரி கதைக்காதை. எனக்கு கடந்த பல வரியமாகக் கொடிகாமம் சந்தையில ஒடி சருகு வேண்டித்தாறது யாரு"

ஒடி சருகின் மண்ணை நீக்கி விரித்து அவற்றை சைசாக்கி எண்ணிக்கட்டி பாடமாக அடுக்கிவைக்கின்ற நுட்பங்கள் அவருக்குத் தெரிந்திருந்தன. ஒடிசருகை பதப்படுத்துவது இலேசல்ல. பொன்னுத்துரை அதில் கைதேர்ந்தவர்.

"நாளை மறுநாள் மறந்திடாதை... கொடிகாமத்துக்கு ஒடிசருகு வாறதினம்... அன்டைக்குத் தான் தம்பலகாமம் ஒடிசருகும் கோச்சிவண்டியில வரும்... நேரத்தோட வர மறந்திடாதை."

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி. கரவெட்டி ஒடிசருகுகள் பாய்களில் சுற்றிக்கட்டப்பட்டு கொடிகாமம் சந்தைக்கு வரும். அதேவேளை தம்பலகாமத்திலிருந்து குட்ஸ்றெயின் மூலம் வட்டச் சாக்குகளில் கட்டப்பட்டு ஒடிசருகு வரும். முழுச்சாக்கை இரண்டாகப் பிரித்து இரண்டு நுனிகளையும் தைத்திருப்பார்கள். அதற்குள் ஒடிசருகைத் திணித்து திறந்த இரண்டு வாயில்களையும் அறுத்த சாக்குகளை வைத்துத் தைத்திருப்பார்கள். வட்டமான பொதிகளாக அவை காணப்படும். குட்ஸ் றெயினில் ஏற்றியவர்கள் பெரும்பாலும் அதிலேயே வருவார்கள்.

"மறக்கவில்லை…என்னால அண்டைக்கு வரமுடியாது. மூத்தவன் இரத்தினராசாவை அனுப்புறன். நீ இருக்கிறாய் தானே, பார்த்து வாங்கு. இயலுமானால் கொடிகாமம் ஸ்ரேசனில தம்பலகாமம் ஒடிசருகை கூடுதலாகத் தீர்க்கப்பார்.."

"நெல்லியடி இராமலிங்கம் தனது பொயிலைக் கண்டில நோய் விழுந்த தென்று அறுவடை செய்யாது ஒடிசருகாக்கிப் போட்டான். அதுவும் வருகுது. உள் பொயிலையை நல்ல விலைக்கு விக்கலாம். அது சரி உனக்கு எத்தனை பிள்ளைகள்? எனக்கு மூன்டும் பொம்பிளைகள். ரெண்டு குமருகள். மூத்தவளுக்கு எத்தனையோ கலியாணம் பேசிவந்தது. என்ர மனிசி ஆட்கள். சாதி, சனம் பாக்கிறவை. பேசிவந்த கலியாணங்களை ஒவ்வோர் சாட்டுச் சொல்லிக் குழப்பி விட்டா கண்டியோ? கலியாணங்களில் இந்தக் காலத்தில் நொட்டை நொடி பார்க்கலாமோ? உனக்கு இரண்டு பொடியள். மூன்று பெண்பிள்ளையள் என்ன? மூத்தவன் என்ன வேலை?"

"என்னோட இருக்கிறான் என்ரை வேலைக்கு உதவுகிறான்… என்ர மனிசியும் சாதி சனம் பார்க்கிறவ தான்… கலியாணங்கள் பேசி வரேக்கதான் பிரச்சினை… சரி சரி… நாளைக்கு தம்பியை அனுப்புறன்…"

தொடர்ந்து பெய்த மழை ஓய்ந்துவிட்டது. அதி காலையே தம்பிஜயா வீட்டிற்கு இரத்தினராசா வந்துவிட்டான்.

"தம்பியைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன். தேத்தண்ணியைக் குடிச்சிட்டு சந்தைக்குப் போவம்… இரும் தம்பி." அந்த நேரம் அடுக்களைக்குள் இருந்து அவர் மனைவி பொன்னம்மா அவரைக் கூப்பிட்டாள்.

"உந்தப்பொடியன்பொன்னுத்துரையின்ரமகனா? பொன்னுத்துரையாக்கள் சைவக்காரர் எல்லோ? தேத்தண்ணிக்குக் கூப்பிட்டியள்.. எந்தப் பேணியில கொடுக்கிறது?"

"உந்தச் சீலம்பாய்களைப் பாராமல் தேத்தண்ணியைக் கொடுத்து விடு... மூத்தவள் தாரணி எங்கை? அவளிட்ட அனுப்பு..."

தாரணியைப் பார்த்து அவன் வியந்தான்.

'தம்பிஐயாவுக்கு இப்படி ஒரு பெண்ணா? தேவதை போல இருக்கிறாள்' என இரத்தினராசா தனக்குள் எண்ணிக் கொண்டான். அவள் காஃவ் ஸ்கேட்-பிளவுஸ் அணிந்திருந்தாள். பூரித்த மார்பகங்களை அடக்கிய பிளவுஸ், ஸ்கேட்டின் இடுப்புப் பட்டிக்குள் சிறைப்பட்டிருந்தது. அதிகாலையே அவள் தோய்ந்திருந்தாள் போலப் பட்டது. கிளிப் செய்யப்பட்ட கூந்தல் தோகையென பின்பக்கத்தில் முழங்கால் வரை விரிந்து பரந்திருந்தது. 34 -28 -34 என்பதன் அர்த்தம் அன்று தான் புரிந்தது. தேநீர் பேணியை வாங்கும் போது அவளை ஏறிட்டான். கருவிழிகள் சந்தித்தன. நெற்றியில் அவள் கீறியிருந்த திருநீற்றுப் பூச்சு அவனை இழுத்தது. இவ்வளவு கவர்ச்சியா? தேநீரை வாங்கிய அவன், அவள் குசினிக்குள் சென்று மறையும் வரை அவள் பின் அழகைப் பார்த்தான்

"என்னுடைய மூத்தமோள் தாரணி உவள்... ஏ. எல் எடுத்திட்டு இப்ப ஏதோ கொம்பியூட்டர் படிக்கிறாள். பொழுது போக வேணுமே,? படிக்க விட்டிட்டன்..." என்றார் தம்பிஐயா.

சந்தையில் இரத்தினராசாவின் மனநிலை ஒடிசருகைக் கொள்வனவு செய்யும் பக்குவத்திலில்லை. தாரணியின் எழில் தோற்றமே தெரிந்தது. தோகையாக பின்புறத்தில் பரந்திருந்த கூந்தல் அவன் சிந்தையைக் கலக்கியது. உள் மனம் ஏனோ தாரணியைக் கிளியுடன் ஒப்பிட்டது. கிளி அழகிதான். செக்கச் செவேல் என்று தங்க நிறத்தில் ஜொலிப்பாள். தாரணியோ பொது நிறத்தில் கட்டுடலுடன் காண்போரைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சியுடன் காணப்படுவாள். தங்கராசுடன் கிளி சிரித்துப்பேசியதை அவனால் சகிக்க முடியவில்லை உண்மை தான். கிளி தனது மச்சாள் என்ற எண்ணம் அன்று இருந்தது. தாரணியைக் கண்டதும் அந்த எண்ணம் மாறியதோ?

வெள்ள அகதிகள் அடைக்கலம் புகுந்த பள்ளிக்கூடத்தில் கடமையாற்றிய இரத்தினராசாவின் கண்கள் அவனை அறியாமல் அங்குமிங்கும் அலுவலாக அலைந்து கொண்டிருந்த கிளியின் மீது நிலைத்தன. அவன் கண்களுக்கு அவன் முறைப் பெண் அன்று அழகாகத்தான் இருந்தாள். அவளின் உயரமும் மெலிவும் நிறமும் கிளிக்குத் தனிச்சோபையை கொடுத்தன. பக்கத்து வீட்டில் இருந்த கிளியின் கவர்ச்சி அவனுக்கு இதற்கு முன்பு தெரியவில்லை. எடுத்ததற்கெல்லாம் சின்னராசு 'கிளி மிஸ்' எனக் குழைந்தான். அது ஏனோ இரத்தினராசாவுக்கு எரிச்சலை மூட்டியது. ஒரு கட்டத்தில் சின்னராசுவும் கிளியும் குசாலாக அமாந்திருந்து சிரித்துப் பேசினார்கள் அது அவனுக்கு வெறுப்பை மூட்டியது.

"இதோ பாருங்கள் சின்னராசு, நெடுக இப்படி இருக்கக் கூடாது... உங்கட குடிசை வெள்ள அழிவுக்கு நட்டஈடு தருவினம். அதைப் பயன்படுத்தி அப்படியே கொட்டில் போடக்கூடாது."

"பின்ன என்ன செய்வது மிஸ்?"

"லோன் எடுத்து கல்வீடாகக் கட்டுங்கோ... இருக்கிற காணியை நீங்க வேண்டுங்கோ பட்டதாரி மாஸ்ரர்... உங்களால முடியும்... அது உங்க தங்கச்சிக்கு சீதனமானாலும் பரவாயில்லை... நீங்கள் உயர வேண்டும்..." என்றாள் கிளி.

"நல்ல யோசனை தான்... இதை நான் யோசிக்கவில்லை காணி நீண்ட குத்தகைதான்... ரெண்டு தலைமுறைக்கு மேலாகிறது தான். கல் வீடு கட்டிற எண்ணம் எழவில்லை. இப்ப நீங்க நினைவைக் கிளப்பி விட்டீங்கள் உங்கட ஆக்கள் விடுவினமா? குத்தி முறிவினம்"

"அவையள் என்ன சொல்கிறது.. நீங்க வீடு கட்டினா?"

இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த இரத்தினராசாவுக்கு அடங்காத ஆத்திரம் மூண்டது. அந்த ஆத்திரத்தின் விளைவாகத் தான் கைநீட்ட நேர்ந்தது. தாரணியைக்கண்டதும் கிளி மேல் படிந்திருந்த சலனம் கரைந்தது. தாரணியின் கவர்ச்சி எவருக்கும் வராது என இரத்தினராசா எண்ணமிட்டான்.

வாங்கிய ஓடிசருகை வண்டிலில் ஏற்றிவிட்டு பஸ்ஸில் இரத்தினராசா வீட்டிற்குத் திரும்பினான். இருள் கவிந்திருந்தது. வீட்டின் ஒவ்வொரு மூலையில் ஒவ்வொருத்தர் இடிந்து போய் இருந்தார்கள். நடந்த விடயங்களைக் கேள்விப்பட்ட அவன் இடிவிழுந்தவன் போலானான்

அவனுடைய தங்கை தேவராணி டிரைவர் துரைசிங்கத்துடன் எங்கோ ஓடிவிட்டாள். இருவரையும் அதிகாலையே காணவில்லை.

“பதினெட்டு வயதிற்குள் அவளுக்கு கலியாணம் தேவைப்பட்டிருக்குது.”

இன்னொன்றும் பேரிடியாக இறங்கியது.

மாணிக்கராசனை விசாரணை ஒன்றிற்காக புலிகள் இயக்கம் அழைத்துச் சென்று விட்டினமாம்.

# 6

கொடிகாமம் சந்தியிலிருந்து வடக்காக பருத்தித்துறை நோக்கிச் செல்லும்போது எதிர்ப்படும் சுட்டிபுரம் அம்மன் கோயிலுக்கு அருகில் துரைசிங்கத்தின் சிறிய வீடு இருந்தது. அக்குடும்பத்தின் கடைசிப்பிள்ளை அவன். எல்லாரதும் செல்லப்பிள்ளையாக விளங்கினான். படிப்பென்பது கடுகளவும் அவனுக்கு ஏறவில்லை. அவனுடைய தகப்பன் அவனைக் கவனமாக காலைவேளைகளில் அழைத்துச் சென்று பாடசாலையில் விடுவார். அவருடைய முயற்சி பலிக்கவில்லை. நான்காம் ஆண்டுடன் பள்ளிக்கூடத்திற்கு விடைகொடுத்துவிட்டு வயல்வெளியென்றும் தென்னந்தோட்டமென்றும் அலையத் தொடங்கினான்.

துரைசிங்கம் இலட்சணமான பையன். தீப்பிளம்பு போன்ற நிறம் அவனுடையது. செல்லையா ரீச்சர் அவனைக் கண்டிக்க நேர்ந்தால் அவனுடய தொடையில் கிள்ளுவார். அவனுடைய நண்பர்கள் அவன் வயது ஒத்தவர்கள் அல்லர். வயதிலும் தோற்றத்திலும் பெரியவர்கள். சுட்டிபுரம் அம்மன் கோயில் வயல்வெளியில் சீர்காழி கோவிந்தராஜனின் பாட்டுக் கச்சேரி நிகழ்ந்த போது தான் எலியனின் நட்பு கிடைத்தது. துரைசிங்கத்தைப் பழுதாக்கியதும் தெரியாத விடயங்களைக் காட்டிகொடுத்ததும் எலியன் தான். அப்போது அவனுக்கு வயது பதினைந்து பதினாறு இருக்கும்.

வயலுக்கு வேலைக்கு வந்த சின்னாச்சி அவனை ஒருநாள் கண்டாள் அவளை அவனும் ஆழமாகப் பார்த்தான். அவளுடைய உடல் திரட்சி அவனை அவளையே ஏறிட வைத்தது.

“என்ன பார்க்கிறாய்? வீட்டவா வடிவாப் பாக்கலாம்.”

“எப்ப?” சின்னாச்சிக்கு அவனிலும் ஐந்து வயது கூடுதலாக இருக்கும்.

“இப்ப வா... அவர் வேலைக்குப் போட்டார். குடிசையில ஆரும் இல்லை..”

அவனுக்கு இப்போது பெண் ஒருத்தி தேவைப்பட்டாள். எலியன் எவ்வளவு சொால்லி இருக்கிறான். சுவைத்துப் பார்க்க வேண்டாமா?

இருபது வயது வரை சின்னாச்சியே கதியெனத் திரிந்தான். சின்னாச்சியின் கணவன் பாளைக் கத்தியோடு அவனைத் துரத்தியபோது கொடிகாமத்தைவிட்டு ஓடினான்.. அந்த வேளை நல்லதொரு கார் டிரைவரை பொன்னுத்துரை தேடிக் கொண்டிருந்தார். அதிர்ஷ்டம் அவனைத் தேடி பொன்னுத்துரை வடிவில் வந்தது சாப்பாட்டுடன் தங்குமிடமும் கிடைத்ததில் அவனுக்கு மகிழ்ச்சி. நிம்மதியாக இருக்கலாம்.

தேவராணியின் மனதில் துரைசிங்கத்தின் வடிவம் முதல்நாளே படிந்து விட்டது. துரைசிங்கம் கவனமாகக் காய்களை நகர்த்தினான். மதிய நேரங்களில் தாய் தமக்கை அலுவலாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தேவராணி அவனுக்கு உணவுபரிமாறவும் நேர்ந்தது. அச்சந்தர்ப்பங்களில் பேசவும் பழகவும் வாய்ப்புகள் ஏற்பட்டன. துரைசிங்கம் சந்தர்ப்பத்தை நன்கு பயன் படுத்திக்கொண்டான்.

“கொடிகாமத்தில எங்களுக்கு பெரியவீடு இருக்கு.. வயல்கள் இருக்குது. தென்னந் தோட்டம் ஒன்று இருக்குது... ஏதாவது தொழில் செய்வதற்காக இங்க வந்தன்... நான்கு தலைமுறைக்கு சொத்து காணும். சும்மா இருந்து சாப்பிடலாம். வசதியிருக்குது...”

“அப்படியா... எவ்வளவு படிச்சிருக்கிறியள்?” என்று தேவராணி கேட்டாள்.

“ஏ.எல்...! யூனிவேசிற்றிக்கு என்ர பண்ண ஒருமார்க் குறைவு. விடு பட்டிட்டன்.”

“பெரிய ஆள் தான்...”

தேவராணி குளுகுளுவென்று வளர்ந்திருந்தாள். வயதிற்கு மிஞ்சிய வளர்ச்சி. அவளுடைய உணர்வுகளை அந்த வயதிலேயே சில நிகழ்வுகள் தட்டிவிட்டிருந்தன. பிந்திய மாலை வேளைகளில் மதிய உணவிற்காக வீடு வரும் மாணிக்கராசா உடனடியாக அடிவளவிற்குச் செல்வான் அவர்களுடைய வீடு நாற்சாரம். குளியறை வீட்டிற்கு வெளியே அடிவளவிற்குள் இருந்தது... மதிய உணவிற்கு வரும் மாணிக்கராசா அடிவளவிற்குப் போவது பற்றி முதலில் எவரும் சந்தேகப்படவில்லை. தேவராணிகு சந்தேகம் ஏற்பட்டது. அவன் சென்ற சிறிது நேரத்தில் அவன் தடத்தைத் தொடர்ந்து அவர்கள் வீட்டு வேலைக்காரப் பெண் சொர்ணம் போய்வந்தாள். என்ன நடக்கிறது?

அதிகாலை. எவரோ வீட்டின் முன் சச்சரவுப்படுவது கேட்டது. தேவராணி பாயைவிட்டு எழுந்திருந்தாள். ஐயாவும் வேலைக்காரப் பெண்ணின் தகப்பனும் சச்சரவுப்பட்டார்கள்.

"உம்முடைய மகளைப் போகேக்கை கூடக்கூட்டிக்கொண்டு போம்..." என்றார் ஐயா.

"ஏன்?"

"அவள் இங்க மாப்பிள்ளை பிடிக்கப் பாக்கிறாள். என்ரை ரெண்டாவது பொடியன் மாணிக்கராசாவைப் பழுதாக்கிப் போட்டாள்."

"என்ரை பிள்ளை அப்படி இருக்காது... உங்கடபிள்ளை அவளப் பிடிச்சிருப்பான்... அவளைக் கெடுத்துப்போட்டு அனுப்பப்பாக்கிறியள். நல்லா இருக்குது.. பேசாமல் ரெண்டு பேருக்கும் கட்டி வையுங்கோ..."

"ஆசை தான் உனக்கு... உயரப் பறக்கப்பாக்கிறியள்..."

"மறுத்தால் இயக்கத்திட்டை போவன். இலேசில விடமாட்டன்."

"செய்யிறதைச் செய்..." என்றார் பொன்னுத்துரை. தேவராணிக்குத் திக்கென்றது. ஐயா இயக்கம் பற்றித் தெரியாமல் பேசிவிட்டார் தேசவிடுதலையை நோக்கமாகக் கொண்டு ஆரம்பித்த இயக்கங்கள் இன்று சமூகநல நோக்கு

விஷயங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. அவர்கள் இன்று ஒரு இக்கட்டான காலகட்டத்தில் வாழ்கின்றார்கள். அவர்களை இன்றைய சூழ்நிலைக்குத் தள்ளிய காரணத்தை தேவராணி எண்ணிப்பார்த்தாள்.

சொர்ணத்தின் தகப்பன் சொன்னபடி புலிகளிடம் முறைப்பாடு செய்தார். வாகனமொன்றில் துப்பாக்கி சகிதம் வந்த புலி வீரர்கள் மாணிக்கராசனை அள்ளிக்கொண்டு போக அதற்காக் காத்திருந்ததுபோல துரைசிங்சகமும் தேவராணியும் காணாமல் போனார்கள்.

# 7

புகையிலைக் கன்றுகள் வெட்டியாகிவிட்டன. சுப்பையா எதிர்பார்த்த மாதிரி அவருடைய கன்றுகளின் வாளிப்பான இலைகள் மழை நீரில் கழுவப்படவில்லை. வெட்டிய புகையிலைக் கன்றுகளை பனைகளை இணைத்துக் கட்டிய கொடிகளில் வெயிலில் உலரப் போட்டுக் கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டு செல்லப்பா பதைபதைக்க ஓடிவந்தார். அவர் வயதை ஒத்தவர்.

“விசயம் தெரியுமே?”

“எது? மாணிக்கராசாவைக் கொண்டுபோன சங்கதியா?”

“அதில்லை... சின்னத்துரையற்ற பொடியனை நேற்று இயக்கத்தில சேர்க்கப் பிடிச்சுக் கொண்டு போட்டான்களாம். உனக்கு மூன்று பொடியள் இருக்குது... இதுகளை இந்தப் பிராந்துகளிடமிருந்து பாதுகாக்க வேணாமே? மூத்தவனையாவது எங்கயாவது அனுப்பி வை. சம்பந்தர் கனடாவுக்கு அனுப்பக் கேட்டவரெல்லே?”

“ஓமோம்... பெருவாரிப் பணமும் கேட்டவர்..இந்த முறைப் பொயிலையை வித்து மூத்தவள் கிளியை கரை சேர்க்கலாம் எனப் பார்த்தன்.” என்றார் சுப்பையா.

“அதுகளைப்பேந்து பார்க்கலாம். முதலில மணிவண்ணனை அனுப்புற அலுவலைப் பார்... சுப்பையா...”

செல்லப்பா சொன்னவை சரியெனப்பட்டது. மணிவண்ணனை எப்படியாவது வெளிநாடொன்றுக்கு அனுப்பியாகவேண்டும். புகையிலை விற்று காணாவிட்டால் தோட்டத்தை விற்கவேண்டியது தான். உரும்பிராய் வைத்திலிங்கம் எப்போதும் வாங்கத் தயாராக இருக்கிறார்.

"சின்னப்பொடியன் என்று யோசியாதை... மணிவண்ணனிலும் சின்னதுகள் எல்லாம் போயிருக்குதுகள்" முத்துராசாவின் மகன் கனடாவில் கம்பனி ஒன்று நடத்திறான். அவனுக்கு ஒரு கடிதம் எழுதினால் போதும்... தன்னோட வைச்சிருப்பான்.."

"அவனோடயோ? நல்லா இருக்குது... அவன் லோன்றி ஒன்றெல்லோ நடத்திறான்?"

"விசர்க் கதை.. அது யந்திரங்களோடு கூடிய நவீன லோன்றி... இப்ப இதைப் பார்க்கிறதே? எதுக்கும் நீ முதலில் ஏஜன்ற் சம்பந்தரைப் பார்.."

சம்பந்தர் மறுக்கவில்லை.

"பொடியனைக் கொண்டு வந்து கொழும்பில தா. மற்றதெல்லாம் என்னோட. புலிகளிடமும் ஆமியிடமும் கொழும்புக்குப் போறதுக்கு பாஸ் எடுக்க வேணும்... அது இலேசில்லை..."

முதலில் புலிகளிடம் பாஸ் பெறவேண்டும்.

சுப்பையா விண்ணப்பப்படிவத்தை பவ்வியமாக அவனிடம் நீட்டினார். வலு மரியாதையாகத்தான் நீட்டினார். யாழ்ப்பாணத்துக்கு வெளியே செல்வதற்கு இயக்கத்திடம் அனுமதிப் பாஸ் பெறவேண்டும். பாஸ் கொடுக்கிற பொடியளும் அந்தப் பணிமனையில் வேலை செய்பவர்களும் ஏதோ உலகம் தங்களால் தான் இயங்குகிறது என்ற எண்ணம். எத்தனை பேரின் விண்ணப்பத்தை பாஸ் பண்ணி அங்காலை அனுப்புவதிலும் பார்க்க விண்ணப்பத்தை நிராகரித்து மறிக்கலாம் என்பதில்தான் நாட்டம். தாங்கள் அங்கால் இங்கால் நகர முடியாமல் இங்கேயே முடங்கிக் கிடக்க யாழ்ப்பாணத்துச் சனம் உலகம் சுற்றுவதா?

சுப்பையா நீட்டிய விண்ணப்பத்தைக் கண்ணன் அலட்சியமாக வாங்கிக் கொண்டான்.

'எங்கை போறீர்?'

'அதுக்குத் தானே கொடுத்திருக்கிறன். போற வாற இடம் அதில இருக்குது?'

'அது எனக்குத் தெரியும். நீர் கேட்டதுக்குப் பதில் சொல்லும். வாய்க்குள்ள என்ன கொழுக்கட்டையே? எங்க போகப் போறீர்?' என்று காட்டமாக மீண்டும் கேட்டான். இவனோடு கொளுவிக் கொள்ளக் கூடாது. காரியமாக வேண்டும்.

"கொழும்புக்கு... மகனை கூட்டிப் போறன்..."

"உங்கட ஐசியை எடுங்கோ..."

அவர் எடுத்துக் கொடுத்தார். அவன் வாங்கித் துருவித் துருவிப் பார்த்தான்.

'உங்கட குடும்ப அட்டையை எடுங்கோ...'

அவர் எடுத்துக் கொடுத்தார்.

'உங்கட துணைப்படை பயிற்சி முடித்த அட்டை எங்கை. பயிற்சிக்குப் போனனீங்களோ?'

'எல்லாரும் போகத் தானே வேணும். வயது இதில முக்கியமல்ல. வயசு போனாலும் போகவேணும் நானும் போனனான் இன்னமும் நாலு நாள் முடிய இருக்குது. கொழும்புக்கு போட்டு வந்து எடுக்கிறன்.'

'அது ஏலாது... பயிற்சியை முடிச்சிட்டு வாரும்...'

அவருக்கு ஆத்திரமாக வந்தது.

'வரத்தான் விடுகிறியலில்லையே? வந்தால் அங்க இங்கயெண்டு அலைக்கழிக்கிறியள். பூந்தோட்டம் முகாமிற்கு போகச் சொல்லிறியள். வலது குறைந்தோரைப் பராமரிக்கவென டொலரில் காசு நன்கொடை முருகண்டியில் கேட்டு ரிக்கற் வேறை விக்கிறியள். காசு கேட்கிறியள். காசு தராட்டில் பங்கரில போடுறியள். இங்க வந்தவைக்கு நடந்தவற்றைக் கேள்விப்பட்டால் ஆரும் வருவினமே? நான் கனக்கக் கதைக்கவில்லை. உண்மையைத் தான் சொல்லுறன். பாஸ் கேட்டால் பிள்ளையளில வயது வந்ததுகள் எத்தனை இருக்குது என்பியள்."

"கனக்க பேசுறிர்... பாஸ் தர முடியாது..."

சுப்பையா ஏமாற்றத்தோடு திரும்பி வந்தார். இதயம் கனத்தது.

"கடைசியாக ஒரு வழி இருக்கிறது. பெரியவருக்கு உண்மையைச் சொல்லி விண்ணப்பியுங்க. நாங்கள் உங்கள் ஆதரவாளர். எனக்கு இத்தனை பிள்ளைகள். எனது பேரப்பிள்ளைகள் மூன்று இயக்கத்தில் சேர்ந்து போராடிச் செத்து விட்டார்கள். எனது குடும்பம் கஷ்டத்திலுள்ளது. ஒரு பிள்ளையை உழைக்க வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும். பாஸ் தாருங்கோ என்று தாழ்மையாக எழுது... கிடைக்கும்" என்றார் செல்லப்பா. அவர் வழிகாட்டல் வேலை செய்தது. அடுத்து மணிவண்ணனுக்கு இராணுவ பாஸ் எடுக்க நேர்ந்தது. எவ்வளவு அலைச்சல்?

குடையைக் கையில் எடுத்துக் கொண்டு வீதியில் இறங்கினார் சுப்பையா. மகனின் அடையாள அட்டையில் ஒரு போட்டோப்பிரதி எடுத்துக் கொண்டார். கிளியறன்ஸ் போமை தனக்கும் நிரப்பிக் கொண்டு விதானையாரிடம் சென்றார். அவர் பிரிவின் கிராமசேவையாளர் கடமையைத் திருப்தியாகச் செய்பவர். அலுவலகத்தில் இருந்தார். விஷயத்தைச் சொன்னார்.

"இவங்களிட்ட கிளியறன்ஸ் எடுக்கிறது சிரமம். உங்களுக்குச் சிரமம்... நூற்றெட்டு விசாரணை செய்வாங்கள்." என்றார்.

படிவத்தை எடுத்துக் கொண்டு பிரதேச செயலாளரிடம் சென்றார். மூன்று நாட்களுக்குப் பிறகு தரிசனம் கிடைத்தது. படிவத்தை எடுத்துக் கொண்டு இராணுவ காம்பிற்குச் சென்றார்...

காத்திருந்து மத்தியானத்துக்குப் பின்னர் படிவத்தை அங்கு வந்த இராணுவ வீரனிடம் கொடுத்தார்... நுணுக்கமாகப்பார்த்தான்.

“மாத்தயா, இதில ஏஜிஏயின்ர றபர் ஸ்ராம் சீல் இல்லை...”

படிவத்தில் றப்பர் முத்திரை வாங்காதது தன் பிழைதான். இரண்டு நாட்கள் அலைந்து றப்பர் ஸ்ராம்ப் சீல் அடிப்பித்தார்.

“பார்த்தால் படிச்சவர் மாதிரி இருக்கு.... ஸ்ராம் வாங்க வேண்டுமென்று தெரியவில்லை” ஏச்சினை வாங்கி மூடையாகக் கட்டிக்கொண்டு முகாமிற்கு வந்து மத்தியானம் வரை காத்திருந்தார்... காத்திருக்கும்போது பழைய வாழ்வின் இனிமை நினைவில் சதிராடியது. நினைத்ததும் யாழ்தேவியில் ஏறிக் கொழும்புக்குப் போய்வந்த இனிய காலம் ஒன்றிருந்தது. கள்ளர் போலப் போய்வர நேர்ந்து விட்டது. ‘ஒரு கோதாரியும் வேண்டாம். வீட்டோடு போய் நிம்மதியாக இருக்கலாம்’ போலப் பட்டது. பங்குனி வெயிலுக்குள் சயிக்கிளில் அங்குமிங்குமாக அலைவது எரிச்சலைத்தந்தது.

மினக்கெட்டு வந்துவிட்டுப் படிவத்தைக் கொடுக்காமல் போவதா? மூன்று நான்கு மாதங்களாகக் கிளியறன்சுக்காக அலைபவர்கள் இருந்தார்கள். ஒரு மனிசி கண்ணீர்விட்டு அழுதும் பார்த்தாள். பயனில்லை.

“என்ன மாத்தயா, உங்கட குடும்ப அட்டையைக் கொண்டு வாருங்கள்.”

கொண்டு போனார்.

“ஆமி குடும்பப்படம்போட்ட அட்டை தேவை..”

அதையும் கொண்டு போனார்.

“சரி இந்த நம்பர்த்துண்டைக் கொண்டு போங்கோ... போமை அனுப்பி வைக்கிறம் கிளியறன்ஸ் வந்ததும் தாறம். ரெண்டு கிழமையால வாரும்...”

பெரும் சாதனையாளர் நினைவோடு வீடு வந்தார்.

“கிளியறன்ஸ் கிடைச்சிட்டுதா ஐயா, தம்பி. எப்ப கொழும்புக்குப் போறான்.” என்றாள் வந்ததும் வராததுமாக கிளி.

“இப்ப தான் கொடுத்திருக்கிறன். கிளியறன்ஸ் வர இரண்டு கிழமை செல்லுமாம் இதுக்குப்பிறகு விமான ரிக்கற்றுக்குப் பதிந்து... சும்மா லேசே பிள்ளை? முந்தின காலம் மாதிரியே? நினைச்சோனை யாழ்தேவி ஏறிக் கொழும்புக்குப்போக. “

கொழும்புக்குப் போய் வருவதில் இருக்கின்ற கஷ்டம் புரியாததல்ல... கலியாணத்துக்கு நாள் குறித்துவிட்டு மாப்பிள்ளை கொழும்பிலும் பொம்பிளை யாழ்ப்பாணத்திலும் பயணம் செய்யக் கிளியறன்ஸ் கிடைக்காமல் தவித்துக் கடைசியில் கலியாணம் தள்ளிப்போன சங்கதிகள் எத்தனை? கொள்ளி வைப்பவன் கொழும்பிலிருந்து வரப் பிளேன் கிடைக்காமல் அவனுக்காகக் கருவாடாகிப் பத்துப் பதினைந்து நாட்களாகக் காத்திருந்து ஏமாந்த சடலங்கள் யாழ்ப்பாணத்தில் எத்தனை?. கொள்ளி போடப்பிள்ளை இருக்கிறான் என்று பெருமைப்பட்ட ஆண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் இரவல் கொள்ளியில் எரிந்து சாம்பலாகியோர் எத்தனைபேர்?

# 8

சுந்தரத்தின் குடிசை இருந்த இடத்தில் சிறியதொரு கல்வீடு கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்களுடைய சமூகத்தில் இது பெரும் மாற்றமாகும். தன்னால் ஒரு கல் வீடுகட்டும் சந்தர்ப்பம் வரும் எனச் சுந்தரம் எண்ணிப் பார்த்தவனல்லன். ஆறு பேர் கொண்ட சிறிய குடும்பம் அவனுடையது. சின்னராசு மூத்தவன்... அடுத்தது இன்னொரு மகன் துரைராசு. அடுத்த இரண்டும் பெண் பிள்ளைகள்.

“கல் வீடு கட்டும் எண்ணத்தை சுப்பையா அண்ணரின் மகள் கிளிதான் வற்புறுத்தி ஏற்படுத்தினாள். நான் எண்ணியிருக்கவில்லை... வீட்டிற்கு முதல் அத்திவாரம் போட சுப்பையா அண்ணரைத்தான் கூப்பிடவேண்டும். நல்ல மனசுடைய மனிசன்.” சின்னராசுவின் எண்ணப்படி சுப்பையாவே அத்திவாரம் போட்டார். அன்று ஆறுமுகம் சண்டமாருதமாக வந்து ஆட்சேபம் தெரிவித்து வாய்த்தர்க்கம் போட்டார்.

“சுந்தரம் நீ செய்யிற வேலை சரியே? இது எங்கட பரம்பரைக்காணி. நீங்கள் இருக்கிறதுக்காக விட்டிருக்கிறம். அதில பேமனன்ரா எதுவும் கட்ட முடியாது. நிற்பாட்டு கட்டிறதை...”

சுந்தரம் முதலில் திகைத்துப் போனான். சின்னராசு தலையிட்டபின் தான் சமரசம் வந்தது.

“ஆர் சொன்னது உங்கட காணியெண்டு?”

“என்னட்ட உறுதியிருக்குது...”

"அதெல்லாம் யப்பான் உறுதிகள்... இனி உந்தப் பருப்பெல்லாம் அவியாது..."

"நீ படிச்சிட்டாய்... என்ன?"

"எதையாவது சொல்லுங்கோ... இவையெல்லாம் சிவன்கோவில் காணிகள் நாங்கள் சிவன்கோயில் தர்மகர்த்தாவிட்ட பேசி அனுமதிச் சீட்டும் பெற்றிட்டம். பிரதேச சபையும் கட்டிடப் படத்தை அங்கீகரித்துவிட்டது."

ஆறுமுகம் இடிந்து போனார்.

"அதையும் பார்க்கிறன். யாழ்ப்பாணத்தில உறுதியில்லாக் காணியெல்லாம் சிவன் கோவில் காணிகள்... கோட்டில சந்திப்பம்."

"எதிரியாக சிவன்கோவில் தர்மகர்த்தாவைக் கூப்பிடுங்கோ..." என்றான் சின்னராசு.

நடந்தவற்றைக் கேள்விப்பட்ட கிளி, "எதுக்கும் கவலைப்படாதீங்கோ. அம்மான் வெருட்டிப் பார்த்தவர். நீங்கள் வீடு கட்டுவதை அவரால பொறுக்க முடியவில்லை... அவ்வளவு தான்." என்றாள். சின்னராசுவும் கிளியும் அளவளாவிக் கொண்டிருந்தமையை சின்னராசுவின் தம்பி துரைராசு பார்த்து விட்டான். அவனுக்கு வித்தியாசமாகப்பட்டது.

"அண்ணை உன்ர போக்கு பிடிக்கவில்லை. கிளி அக்கா ஆரெண்டு தெரியும். வீணாப் பிரச்சினைகளை ஏற்படுத்தாதை... நாங்க ஊரில இருக்க வேணும்."

அன்று மாலை அக்கிராமத்தில் ஒரு செய்தி பரவியது. மதகடி லைற் கம்பத்தில் ஒரு இளைஞனைச் சுட்டு அவன் சடலத்தை அதில் கட்டியிருக்கிறார்களாம். சின்னராசு ஓடிப்போய்ப் பார்த்தான்.

மாணிக்கராசா சடலமாகக் கட்டப்பட்டிருந்தான். அவனது கழுத்தில் "போட்" மாட்டப்பட்டிருந்தது. 'ஒரு பெண்ணை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கியமை, எதிரியோடு தொடர்பு கொண்டமை காரணமாக துரோகி' என அடையாளம் காணப்பட்டான்.

பொன்னுத்துரையின் வீடு கலங்கிப் போனது.

மாணிக்கராசாவுக்கு இப்படியொரு தண்டனையை எவரும் எதிர் பார்க்கவில்லை. வற்புறுத்தி சொர்ணத்திற்கு கலியாணம் செய்துவைப்பார்கள் என எண்ணினார்கள். தன்னை வற்புறுத்தி சம்மதம் பெறுவார்கள் என பொன்னுத்துரை எண்ணியிருந்தார். தேவராணி துரைசிங்கத்துடன் ஓடிப்போன துயரம் இன்னமும் ஆறவில்லை. அதற்குள் இன்னொரு துயராக மாணிக்கராசாவின் படு கொலை வந்துள்ளது. எதிரியோடு தொடர்பு கொண்ட துரோகி ஆக்கிவிட்டார்களே? யாரோடும் பழகாத பையன் சிநேகிதர்களும் கிடையாது.

மௌனமாக பொன்னுத்துரை அழுதார். வெள்ளத்தால் இடம் பெயர்ந்து திண்ணையில் இடம் பிடித்துக்கொண்ட அன்னம் தமையனின் மனைவி பாக்கியத்தை ஆசுவாசப்படுத்துவதில் ஈடுபட்டாள். கிளி மச்சாள்மார்களுக்கு ஆறுதல் கூறினாள். ஆறக்கூடிய துயரமா?

'விசாரிக்காமல் கொள்ளாமல் இப்படிச் செய்திட்டாங்களே,' என இரத்தினராசா பொருமினான். 'அடிச்சபோது செத்திட்டான். சோடிச்சிருக்கினம். துரோகியெண்டு.' தம்பியை இழந்த சோகத்திடையேயும் கிளி அங்குமிங்கும் ஓடித்திரிவது கண்களைக் கிளறியது. தாரிணியும் நினைவை ஆக்கிரமித்தாள்.

ஒரு பக்கமாக நின்றிருந்த சின்னராசுவின் விழிகள் கிளியை மொய்ப்பதாகப் பட்டது. அடங்காத ஆத்திரம் அவனுள் ஏற்பட்டது

சிலநாட்களாகச் சின்னராசுவின் மனம் ஒரு நிலையிலில்லை. கிளியின் எழில் முகம் அவனது அமைதியைக் குலைத்தது. இரண்டு நாட்களுக்கு முன் கிளியின் கட்டுடலைதொட்டு ஸ்பரிசிக்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது. மனம் அலை பாய்ந்தது.

சுப்பையாவின் பனங்காணியில் ஒரு துலாக்கிணறு இருந்தது மழையால் அரைக்கிணறு தண்ணீர் கிணற்றில் இருந்தது. அக்கிணற்றில் கிளி குடும்பத்தினர் நீராடுவதுண்டு. அன்று பத்துமணியளவில் சின்னராசா தன்

வீட்டுமுற்றத்தில் நின்றபோது பனையொன்று சரிந்து விழுகின்ற சத்தமும் அதனைத்தொடர்ந்து 'தொபுகடீர' என எவரோ நீரில் விழுகின்ற சத்தமும் கேட்டது.

"ஐயோ கிளி அக்கா கிணத்தில..ஆராவது காப்பாத்துங்களேன்..." எனக் கிளியின் தங்கையின் கூக்குரலும் கூடவே கேட்டது.

சின்னராசு படலையைத் தள்ளிக் கொண்டு பாய்ந்தான். சுப்பையாவின் கிணற்றுத் துலா அச்சுலக்கை முறிந்து கிணற்றுக்கட்டின் மீது பாறிக் கிடந்தது. துலாக்கயிற்றைப் பற்றி நீர் அள்ளி முழுகிக் கொண்டிந்த கிளி காலிடறி குறுக்குக் கட்டுடன் கிணற்றுள் அமிழ்ந்தாள். கணப்பொழுதில் கிணற்றுள் குதித்த சின்னராசு அவளை வாரி அள்ளித் தோளில் போட்டபடி வெளியே வந்தான்.

கிளி மயங்கிவிடவில்லை. அவன் அவளை வாரித் தூக்கித் தோளில் போட்டதை அறிவாள். குறுக்குக் கட்டுடன் குளித்தவள் வெட்கத்தால் கண்ணை மூடிக் கிடந்தாள்.

"கவனமாக அள்ளக் கூடாதா?"

"அச்சுலக்கை முறிஞ்சதுக்கு நானென்ன செய்ய?" அவன் முதுகில் கிடந்த அவளைக் கனவு காணவைத்தன. அவனை ஏங்க வைத்தன

அப்போது வெளிப் படலையினூடாக தேவராணி தனித்து நுழைவது தெரிந்தது.

துரைசிங்கத்தை ஏமாற்றம் தழுவியது. வெகுகாலமாகப் பிரிந்திருக்கின்ற பெற்றார் தன்னையும் தான் அழைத்து வந்த தேவராணியையும் ஏற்றுக்கொள்வார்கள் என்ற அவன் நம்பிக்கை தகர்ந்தது. அவர்களைக் கண்டதும் துரைசிங்கத்தின் தகப்பன் எகிறி விழுந்தார்.

"உன்னை ஆர் இங்க வரச்சொன்னது? போடா வெளியில... இந்தப்பக்கம் வராதை... இப்பவும் சின்னாச்சி புரியன் பாளைக்கத்தியோட திரியிறான். கண்டால் கண்டதுண்டமாக வெட்டிப்போடுவான்... அசப்பில உன்னைப்போல ஒரு பொடியனையும் சின்னாச்சி பெத்திருக்கிறாள். உன்னை நம்பி உவள்

தேவராணி வந்திருக்கிறாளே? எக்கேடாவது கெட்டுப்போங்கோ... முதலில இந்த இடத்தைவிட்டுப் போங்கோ..."

தேவராணிக்குப் பலதும் புரிந்தன. அவனோடு புறப்பட்டு அவன் வீட்டிற்கு வந்தாள் அங்கே அவர்களை ஏற்கவில்லை. எங்கே போவது? கொடிகாமம் பஸ் நிலையத்திற்கு வந்தார்கள். எதுவும் புரியவில்லை. அவர்களை ஏற்றுக்கொள்ள ஒருவருமில்லை. துரைசிங்கத்தின் இஷ்ட நண்பர்களே அவனைக் கண்டதும் காணாதமாதிரி மறைந்தார்கள். அவர்கள் அவசரப்பட்டுவிட்டார்கள். இனி என்ன செய்வது?

"வீட்ட போவம்." என்றாள் தேவராணி.

"என்ன முகத்தோடு போறது.. அடிச்சுத்துரத்துவார்கள். வவுனிக்குளத்தில் ஒரு மாமி இருக்கிறா. அங்க போய் பார்ப்பம்"

வவுனிக்குளத்திற்கு வந்தார்கள். அவனது நம்பிக்கை அங்கேயும் அழிந்தது.

"இங்க உங்களைச் சேர்க்கமுடியாது... தெரிஞ்சால் இங்க இருந்த பாடில்லை. அண்ணர் கோபிப்பார். அது முடியாது... இந்தப் பெண்ணை தாய்தேப்பனிட்ட சேர்த்துவிடு.. அது தான் எல்லாத்துக்கும் சரி..." என்றாள் மாமி. தேவராணியை தனியே அழைத்துச்சென்று, "இவனை நம்பி வந்தியே பிள்ளை.. இவன் காவாலி. உன்ர வீட்ட போ... " என்றாள்..." உன்ர ஐயாவுக்கு என்ன பேர்..? பொன்னுத்துரையோ? பொன்னுத்துரையின்ர மகனைச் சுட்டு லைற் போஸ்ற்றில கட்டியிருக்காங்களாம். பேப்பரில கிடக்குது.. உங்கட ஆக்களே? "

"ஐயோ..." என்றாள் தேவராணி..." எந்தப் பேப்பரில... ஒருக்கா தாங்கோ..."

சந்தேகமில்லை. மாணிக்கராசா தான். அவள் தேம்பித் தேம்பி அழுதாள்.

"என்னை யாழ்ப்பாணத்திற்குக் கூட்டிப்போங்கோ. நான் அண்ணற்ற முகத்தில முழிக்க வேணும்..."

“கூட்டிப்போறன்… வீட்டடியில விடுறன்… உங்கடை வீட்ட இப்ப நான் வரமாட்டன்” என்றான் துரைசிங்கம். இப்போதைய சூழ்நிலையில் தேவராணிக்கு அவனது முடிவு சரியாகப்பட்டது.

தேவராணியை முதலில் பார்த்தவன் இரத்தினராசா தான். அடங்காத ஆத்திரம் வந்தது. எவ்வளவு கேவலத்தை ஏற்படுத்திவிட்டாள். அக்கிராமத்தில் தலைநிமிர்ந்து நின்றது பொன்னுத்துரை குடும்பம். இன்று தொடர்ந்து ஏற்பட்ட இரு காரியங்கள் தலைகீழாக அக்குடும்பத்தை சரித்துவிட்டன.

இவள் ஏன் இப்போது வந்தாள்?
அதற்குள் அன்னமும் தேவராணியைக் கண்ணுற்றாள்.

“போன கையோடு வந்திருக்கிறாள்… தெரியாமல் செய்திட்டாள். ஊருலகில நடக்காததே? பேசாமல் இருங்கோ முதலில் மாணிக்கராசாவின் விஷயம் முடியட்டும். பிறகு பாப்பம்…”

வீடே வாசலில் கூடிவிட்டது. தேவராணியை அணைத்தபடி கிளி அழுதாள். பொன்னுத்துரையின் மூத்தமகள் ராசாத்தி ஓடிவந்து தேவராணியை உள்ளே கூட்டிச் சென்றாள்.

பிரேதப் பரிசோதனையின் பின்னர் மாணிக்கராசனின் சடலம் வீட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. பிரேதத்தைப் பார்த்ததும் மாணிக்கராசனின் ஒன்றுவிட்ட தம்பிகள் கண்ணனும் கனகனும் கொதிப்படைந்தார்கள்.

“எளியவன்கள் அநியாயமாகக் கொன்றிட்டான்கள். இவங்களை நம்பக்கூடாது… இவங்களோட சேரக்கூடாது. படுபாவிகள்… நல்லா இருக்கமாட்டான்கள். புளுத்து சாவான்கள்.” என்றான் கண்ணன்.

“ஒரு இயக்கமும் இது போல இல்லை..” என்றான் கனகன் எனற கனகலிங்கம். “கெட்டவங்கள்…”

இறுதிக்கிரியைகள் ஆரம்பமாயின.

# 9

மழை ஓய்ந்து வெள்ளம் தணிந்து விட்டது... ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. அதற்குள் எவ்வளவோ நடந்தேறிவிட்டன.

கனடாவுக்கு மணிவண்ணனை அனுப்புவது இலேசாக இருக்கவில்லை. சம்பந்தர் மலேசிய பாஸ்போர்ட் ஒன்றினைப் பெற்று அதில் மணிவண்ணனின் புகைப்படத்தை ஒட்டித்தான் அனுப்பினார். மலேசியாவிலேயே உண்மையைக் கண்டறிந்து இலங்கைக்கு அவனைத் திருப்பிவிட்டார்கள். சம்பந்தரின் இடையறாத முயற்சியின் பயனாக ஒரு விதமாகக் கனடாவில் மணிவண்ணன் காலூன்றினான். சுப்பையாவின் தாவடித் தோட்டம் கைமாறியது. கனடாவில் மணிவண்ணனைமுத்துக்குமாரின்மகன்றொரண்டோவிமானநிலையத்திற்கு வந்து அழைத்துச் சென்றதுடன் தனது கம்பனியிலேயே வேலையும் கொடுத்தான். இந்த ஒழுங்குகள் சுப்பையாவுக்குப் பிடித்தமாகவில்லைத் தான். மணிவண்ணனின் முதல் சம்பளம் டொலரில் அவரைத் தேடி வந்ததும் அவற்றை மறந்து போனார்.

கனடாவில் றொறன்ரோ புறநகர் ஒன்றில் மகேசனின் ‘கொற்றன் கெயர் கம்பனி அமைந்திருந்தது. அங்கிருந்த ஹோட்டல்களில் துவாய், பெட்சீற், பிலோ கேஸ் கவர் என்பனவற்றைப் பெற்று சலவைசெய்து கொடுப்பது அக்கம்பனியின் வேலை. இவற்றை சலவை செய்வதற்கு நவீன யந்திரங்கள் இருந்தன. பத்திற்கு மேற்பட்ட சலவை இயந்திரங்களில் வேலை நடைபெற்றது. ஆண்களும் பெண்களும் வேலைசெய்தார்கள். 100 பேர் வேலை செய்தார்கள். அவர்களை யாழ்ப்பாணத்தில் என்றால் தொழில் அடிப்படையில் சாதி பிரித்து ஒதுக்கி விடுவார்கள். அக்கம்பனியில் மணிவண்ணன் வேலை செய்தான். சுப்பையாவுக்கு சங்கடமாக இருந்தது.

ஒரு சனிக்கிழமை ஓய்வாக அவர் கதிரையில் அமர்ந்திருந்தபோது கையில் ஒரு போமுடன் சின்னராசு வந்தான். அவனைக் கண்டதும் ஒரு கணம் உள்ளே அழைப்போமா வேண்டாமா என யோசித்தார். அதற்குள் அவ்விடம் வந்த கிளி,'வாங்க மாஸ்ரர். உள்ள வந்து கதிரையில இருங்கோ…" என வரவேற்றாள்.

"உமக்கு தான் இந்த போம். மாகாணசபை ஆசிரிய பரீட்சை நடக்கப்போகிறது.. நீர் ஏ/எல் பாஸ் பண்ணி இருக்கிறீர். பரீட்சை எடுத்தால் நிச்சயம் பாஸ் பண்ணுவீர்.."

"தாங்ஸ் மாஸ்ரர் இருங்கோ கோப்பி கொண்டு வாறன்..

"எனக்கு வேண்டாம் மிஸ்.'

'வராத நீர் வந்திருக்கிறீர்… குடிச்சிட்டுப் போம். என்ன அவசரம்… இரும் தம்பி' என்றார் சுப்பையா.

இப்போது கிளி ஒரு ஆசிரியையாகி விட்டாள். சுப்பையாவுக்கு மிக்க மகிழ்ச்சி.அடிக்கடி சின்னராசுவை நன்றியுடன் எண்ணிக்கொள்வார். என்ன விதியோ அவளுக்குக் கிடைத்த முதல் நியமனம் சின்னராசவின் பாடசாலைக்கே கிடைத்தது.

பனங்கூடல் வளவு எங்கும் கங்கு மட்டைகள் சொரிந்து கிடந்தன. அவர் பொறுக்காதுவிட்டால் அன்னம் இருமலோடு பொறுக்குவாள். அவர் பனங்கூடலிற்குள் நிற்கும்போது செல்லப்பர் அவரைத் தேடி வந்தார்.

"என்ன இப்பவும் பொறுக்கிறதென்று நிக்கிறாய் கங்குமட்டைகளையும் விடமாட்டாய்…"

"குறை எண்ணாதை… என்ர குமரைக் கரை சேர்க்கக் கொஞ்ச காசு தேவை…"

"சும்மா காசு காசென்டு சாகாதை. மூத்த மகன் கனடாவில் ஒரு கொம்பனியில அசிஷ்டன் மனேச்சர்.. மாதாமாதம் டொலராக அனுப்புறான்…

நீ பாங்கில சேகரிக்கிறாய்... பிறகு குமரைக் கரைசேர்க்க சீதனமில்லை என்கிறாய்... உவன் முத்துக்குமார் வலிய உன்ரை மோனை தன்ரை மகளுக்கு கலியாணம் செய்யக் கேட்டு வந்தவனாமே... நீ மறுத்திட்டியாம்..."

"மறுக்காமல் என்ன செய்யிறது... அவற்றை துணிச்சலைப் பார்... நாங்க செம்பு தண்ணி தூக்காத இடம்... அங்கை செய்வமே? விருப்பம் மெண்டதுக்காக சாதி பார்க்கிறதில்லையோ? துணிச்சலாக வந்து பெண் கேக்கிறார்... கனடாவிற்கு என்ர மோன் போனபோது அவற்ரை மூத்தமகனின்ர கம்பனியில சேர்த்து விட்டவர்."

"இந்தக் காலத்தில சாதியும் சம்பிரதாயமும்... வெளிநாட்டுக்குப் போனவை எத்தனை பேர் இப்ப சாதி பார்த்தவை? ஆயுதப் போராட்டம் அரசியல் வெற்றி தரவில்லை சமுகப் புரட்சி செய்திருக்குது, சமூகத்தில ஆர் இப்ப சாதி பேசுகினம். எல்லாச் சாதியும் அழிஞ்சு போறதில அந்த சாதி ஆக்களுக்கே இப்ப கவலை... படிப்பு வசதி.. தொழில் மாற்றம், பண உயர்வு அனைத்தையும் மாற்றிவிட்டது... முன்னர் போல அடிமை குடிமைத் தொழில் இல்லை... இப்ப எங்களை ஆளுறது யார்? அவயள் தானே? எங்க பகுதி இயக்கப் பொறுப்பாளன் ஆர்? நம்ம ஊரில சலூன் வைத்திருக்கிற தம்பிஜயாவின் மகன்.. வடக்குக் கிழக்கு டம்மி அரசாங்க அதிபர் யார்? உத்தியோகத்தர்மாரின் இடமாற்ற தலை விதியை அந்தாள் நிர்ணயிக்கவில்லையா? பிரதம செயலாளரிலிருந்து அரசாங்க அதிபர் வரை கைகட்டி நிக்கவில்லையா,? மன்னார் பாடசாலையில் சாதாரண வாத்தியாக இருந்தபோது எங்கட ஆக்கள் அந்தாளுக்குச் செய்தவற்றை நினைத்துப் பழி வாங்கிறார். தன்னிலும் உயர் சாதி எண்டால் அந்தாளுக்குப் பிடிக்காது. நீ இப்பவும் சாதி பாக்கிறாய்... இனிச் சாதி பார்த்தால் உன் வீட்டில இனி செம்பு எடுக்க மாட்டினம் கண்டியோ?...

"நீ இப்ப என்ன சொல்கிறாய்?"

"பின்ன என்னத்தை சொல்கிறது உன்ரை மோன் கனடாவில் வேலை பார்க்கிற கம்பனி என்ன?"

"கொற்றன் கெயர் கம்பனி லிமிட்டெட்... அதுக்கு என்ன?"

"அதுக்கு என்னவோ? கொற்றன் கெயர் கம்பனி எண்டால் என்ன தெரியுமோ? அது ஒரு நவீன லோன்றி பெரிய பெரிய மிசின்கள் வைத்திருக்கினம்... அதில வேற ஹோட்டல் துணிகளை சலவை செய்து கொடுப்பினம்... அதில தான் உன்ர மகன் வேலை. அது உனக்குத் தெரியுமோ?"

"அப்ப"

"அப்ப என்ன? உன்ர மகனின்ர உழைப்பைப் பார்த்திட்டு தங்கட தங்கச்சியை உன்ர மோனுக்குக் கலியாணம் பேசிப்பார்க்கினம். இதுகளைத் தெரியாமல் நீ பேசுறாய்... நீ சாதி பேசிக்கொண்டு பொயிலைப் போறணையை தயார் படுத்து... நல்லா யோசி... செய்யிற பொயிலையை போறணையில போட்டு தீன் பொயிலை ஆக்கினால் கூடக்காசு வரும் என்று தான் நினைக்கிறாய்."

"கலியாணத்திற்கு ஒத்துக் கொள்ளலாம்தான் ஆனால் புதிதாக ஒரு பிரச்சினை தோன்றிவிட்டது செல்லப்பா. என்ரை மச்சான் பொன்னுத்துரை தனது மூத்தமகள் ராசாத்தியை மணிவண்ணன் கட்டினால் கிளியை இரத்தினராசாவுக்கு எடுக்கிறாராம். மாற்றுச் சம்பந்தம் கேட்கிறார். என்ன செய்யிறதெண்டு புரியவில்லை. மனிசி அன்னத்துக்கு வலு புளுகம். முத்துராசா குடும்பத்தில பெண் எடுக்கிறதிலும் இது பரவாயில்லை..பிள்ளைகள் ஒத்துக்கொள்ள வேணுமே?"

"புதிய பிரச்சினை தான். நீ சொல்வது சரிதான். ஆனா இந்த சம்பந்தத்தில் பிரச்சனைகள் இருக்குது... கண்டியோ,? இரத்தினராசா குழைக்காடு தம்பிப்பிள்ளை வீட்டில செய்ய விரும்புகிறானாம்... சொல்லுறன் என்டு கோவியாதை உன்ர மோள் கிளிக்கும் உவன் சுந்தரத்தின் மகன் சின்னராசு வாத்திக்கும் தொடுப்பு இருக்கிறதாக பேச்சு ஊரில அடிபடுகுது... யோசித்து செய்..."

சுப்பையா இடிந்து போனார். செல்லப்பர் போன கையோடு முத்துக்குமார் வந்தான். அவர் மீது இருந்த மனஸ்தாபம் முத்துக்குமாருக்குக் குறையவில்லை.

"கடைசியாக கேக்க வந்திருக்கிறன்"

"என்னை யோசிக்க விடு..."

கனடாவில் இருந்த மகன் மணிவண்ணன் கலியாணத்திற்கு சுப்பையாவின் சம்மதம் கேட்டு கடிதம் எழுதியிருந்தான். வேலை பார்க்கின்ற கம்பனியின் முதலாளியின் தங்கை என்று மட்டும் எழுதியிருந்தான். சொந்தமாக வீடும் காரும் முதலாளி வாங்கி கொடுத்திருப்பதாக வேறு எழுதியிருந்தான். அவனுக்கும் வயது வந்துவிட்டது.

அவனை ஒத்த இளைஞர்களை யாழ்ப்பாணத்தில் வைத்துக் காப்பாற்றுவது கடினமாகவிருந்தது. ஒரு பக்கம் தாமாக இயக்கத்தில் சேர்ந்தனர். மறுபக்கம் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டனர். இன்னொருபக்கம் இலங்கை இராணுவம் சந்தேகத்தின் பெயரில் கைது செய்து சிறையிலிட்டது. இவற்றிலிருந்து தப்புவதற்காக இளைஞர்களைப் பொற்றோர் அகதிகளாக இந்த மண்ணைவிட்டு கண் காணாத இடங்களுக்கு அனுப்பி வைப்பதில் கவனமாக இருந்தனர். ஒரு நாள் சுந்தரத்தின் மகன் துரைராசுவை தெருவிலிருந்து வீட்டிற்கு திரும்பி வரும் போது வெள்ளை வானில் வந்த சிலர் பிடித்துச் சென்றனர். சுந்தரம் போராளிகளின் முகாம் முகாமாக ஏறி இறங்கினான். மகனின் கடிதமொன்று போகம்பரைச் சிறைச்சாலையிலிருந்து கிடைக்கும்வரை இராணுவம் தான் மகனைப் பிடித்துச் சென்றதென்பது சுந்தரத்திற்குத் தெரியவில்லை.

'நாளை மறுநாள் அனுராதபுரம் நீதிமன்றில் விடுகிறார்கள். ஆயத்தமாக வரவும்'

ஆயத்தமாகத் சுந்தரம் போனான் பணத்தோடு.

நீதிமன்றில் நீதவானால் விடுவிக்கப்பட்ட பலர் மீண்டும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டமை அவருக்குத் தெரியும். ஆதலால் கவனிக்க வேண்டிவர்களைக் கவனித்து மகனை விடுவித்து வந்தான். இனித் தொடர்ந்து இங்கு வைத்திருப்பதில் பயனில்லை. அவனாவது உயிர் தப்பி வாழட்டும். இங்கு வந்தவன் மறுநாளே புலிகளுடன் இணைந்தான்.

இச்செய்தி அந்த ஊரெங்கும் பரவியது.

சுப்பையா தன் நிம்மதியை இழந்தார்

# 10

வேலுப்பிள்ளைக்கு இருப்புக் கொள்ளவில்லை. எவ்வளவு கேவலம்? விறுவிறெனப் புறப்பட்டு பொன்னுத்துரையிடம் வந்தார்.

“நான் கேள்விப் படுபவை உண்மை தானா?”

“எவை அம்மான்’?”

“கிளியைக் கட்ட இரத்தினராசா மறுத்துவிட்டானாமே? கிளிக்கு என்ன குறை?”

“குறைதான் அம்மான்... அவளுக்கும் சின்னராசுவுக்கும் தொடர்பாம்....”

“உதை நான் எதிர்பார்த்தன். வேறு காரணம் இருக்கா? எனக்கு மறைக்காதை... குழைக்காட்டில மாளப்போறான்.”

“பாக்கியம் அந்தப் பெண்ணை கடைசிவரை இரத்தினராசாவுக்குச் செய்யமாட்டாளாம். சபை சந்தியில செம்பு தண்ணி எடுக்காத பகுதியாம்... அப்படி இருந்தும் தம்பிப்பிள்ளையிடம் கேட்டன் யோசித்து சொல்கிறாராம்.”

“யோசிக்கிறாராமோ?” என்றார் நக்கல் சிரிப்புடன் வேலுப்பிள்ளை.

தம்பிப்பிள்ளையின் மனைவி திடமாக நின்றாள்

“என்ன விசர்க்கதை பேசுறியள், பொன்னுத்துரையின்ர மகனையோ? நாங்கள் செம்பெடுக்காத பகுதயிலை சம்பந்தம் செய்தவை... குலம், கோத்திரம்

பார்க்க வேணாமே? தரகர் மணியத்தார் நல்லதொரு சம்பந்தம் கொண்டு வந்தவர். கொடிகாமம் சிவப்பிரகாசரின் மகனாம் நல்ல சொத்திருக்குது... வயலென்டும் தென்னந்தோட்டமென்றும். துரைசிங்கம் என்று பெயர் பொடியனுக்கு... நான் ஓமென்டிட்டன். நாளைக் கடத்தினால் ஆராவது கல்லுக் குத்திப் போடுவினம் என்றவர். பொடியன் இப்ப தான் வெளியில இருந்து வந்தவனாம்."

தம்பிப்பிள்ளையால் மனைவியின் பேச்சிற்கு மாறாக எதுவும் கூற முடிய வில்லை. மௌனமானார்.

வேலுப்பிள்ளை பொன்னுத்துரையை ஆழமாகப்பார்த்தார். அப்பார்வையின் காங்கை தாங்காமல் பொன்னுத்துரை தலை குனிந்தார்.

"உதை எல்லாம் பார்க்காமல் கிளியை இரத்தினராசாவுக்கு கட்டி வை. எல்லாம் சரிவரும்..அது சரி தேவராணி விஷயமாக என்ன முடிவு செய்திருக்கிறாய்? இதில இனி யோசிக்க என்ன இருக்குது.. பேசாமல் துரைசிங்கத்தை கண்டுபிடித்து கலியாண எழுத்தை முற்றாக்கி விடு."

"அவனையோ? அவனை எங்க கண்டு பிடிக்கிறது? வீட்டாரும் சேர்க்கிறதில்லையாம்."

"நானும் விசாரித்தனான் சுட்டிபுரத்தடி சிவப்பிரகாசம்.. அவற்றை மகன் தான் இவன். நீ ஒருக்கா போய் வா பொன்னு. அதில வெட்கமில்லை. நாங்க பெண்ணைப் பெத்தனாங்கள. நான் ஒருக்கா சுப்பையா வீட்ட போட்டு வாறன்." வேலுப்பிள்ளை விடைபெற்றார்.

அமைதியான குளத்தில் கல்லெறிந்தது போலாகி விட்டது கிளியின் நிலமை. வேலுப்பிள்ளை குழப்பி விட்டார். அடுப்பின் முன் கிளி அமர்ந்திருந்தாள். அடுப்பு கொளுந்துவிட்டெரிந்தது. கிளியின் மனமோ எங்கோ சஞ்சரித்தது.

அவள் மனக்கண் முன் சின்னராசு தோன்றினான். றவுசர் அணிந்த கம்பீரமான தோற்றம் அவனுடையது. பி.எஸ்சி. பட்டதாரி ஆசிரியன். எந்த வகையிலும் மற்றைய ஆசிரியர்களுக்குக் குறைந்தவனல்லன்.

எனினும் மற்றைய ஆசிரியர்களுக்கு முக்கியமாக தவபாலன் ஆசிரியருக்கு சின்னராசுவைக் கண்டால் பிடிக்கவில்லை. சுந்தரத்தின் மகன் தனது குலக்கட்டுப் பாட்டை மீறி விஞ்ஞானப்பட்டதாரியாவதா? அதுவும் சாதியில் பல மடங்கு உயர்ந்த நான் வெறும் ஆசிரியராக இருக்க உவர் பட்டதாரியாவதா? அது மாத்திரமா? கிளி மிஸ் யார்,? அவளுக்கும் இவருக்கும் என்ன அப்படி ஒட்டு? கிளி மிஸ்ஸிற்கு எங்கை அறிவு போனது? தவபாலனைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொள்ளும் அவளால் சின்னராசுவுடன் சிரித்துச் சிரித்துப் பேச முடிகிறது?

சின்னராசுவை அவள் காதலிக்கிறாளா? அவளுக்கு விடை கிடைக்கவில்லை. சின்னராசு அயலவன் சிறு வயதிலிருந்தே ஒன்றாகப் பழகியவர்கள். அவளுக்கு ஆசிரியத் தொழில் கிடைத்தமைக்கு அவன் தான் காரணம். பல விதங்களில் ஆசிரியதொழிலுக்கு அவளுக்கு வழிகாட்டி. தவபாலன் அவளிடம் வந்து பல்லைக்காட்டுவதும் அசடு வழிவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

சின்னராசுவுடன் பேசுவதில் சந்தோசம் இருக்கத்தான் செய்தது. அந்தப் பாடசாலையின் மூத்த ஆசிரியனாக அவன் இருந்தான். அதனால் அப்பாடசாலையின் ஆசிரியத்தலைவனாகவும் பிரதி அதிபராகவும இருந்தான். தவபாலனுக்கு இவை பிடிக்கவில்லை.

“நீங்கள் செய்த வேலை சரியில்லை சேர். எவ்வளவோ பேர் இருக்க சின்னராசுவை பிரதி அதிபராக்கியிருக்கிறீங்க. அவன் ஆர்? பிள்ளையளை அவன் தண்டிக்கிறதே? பெற்றோர் விரும்பவில்லை...” என தவபாலன் அதிபரிடம் வத்தி வைத்தான். “பாங்கிற்கு சம்பளப் பணமெடுக்க மாதாமாதம் சின்னராசுவை அனுப்பிறியள்.. வேற ஆக்கள் இல்லையே?”

“சின்னராசு ஒழுங்கான ஆசிரியர்.” அதிபர் மசியவில்லை. தவபாலனின் முறையீடுகள் பயனற்றதாகின.

சின்னராசுவின் தம்பி துரைராசு இயக்கத்தில் இணைந்தபோது அவளிடம் தான் தன் துயரத்தை அவன் பகிர்ந்து கொண்டான்.

“கேள்விப்பட்டன். கவலை தான். என்ன செய்யிறது சேர். இப்ப இளைஞர்கள் இயக்கங்களில் சேருகிற காலம். தாங்கள் உயிர் தப்ப அது தேவை என எண்ணுகினம் போல... அதை விடுங்க சேர். ஊருலகில நடக்காததே? இயக்கத்துக்கும் ஆட்கள் தேவைதானே?”

ஒரு நாள் பேசும் போது சிரித்தபடி அவன் சொன்னான்.

“கிளி மிஸ்... நீங்கள் மட்டும் எங்கட பகுதியாக இருந்திருக்கக் கூடாதா என எண்ணியதுண்டு... பிரச்சினையில்லை.”

“எதுக்கு...?”

அதற்கு அவன் எதுவும் பேசவில்லை. அந்த அளவளாவல் தொடர்ந்திருந்தால் சொல்லியிருக்கலாம்.

இந்தச் சமூகக் கட்டுப்பாடு நிச்சயம் அவர்கள் இணைவதை அனுமதிக்கப் போவதில்லை. பிரதேச வாதம், குலம், கோத்திரம், பணம், தொழில் என்பன தடைகளாக உள்ளன. அவர்களைப் பொறுத்த அளவில் தொழில் தடையல்ல. அவன் பட்டதாரி ஆசிரியன்.

“எனக்கு இங்கு வேலை பார்க்கவே பிடிக்கவில்லை. எப்போது பார்த்தாலும் எனது சாதியை நினைவுபடுத்துகிறார்கள்.. அன்றைக்கு நவராத்திரி... கடைசி நாளன்று ஒவ்வொரு ஆசிரியர் தான் விரும்பிய பலகாரத்தை வீட்டிலிருந்து செய்து வந்து படைக்கலாம்... அண்டைக்கு அதிபர் என்ன சொன்னவர்?, ‘சின்னராசு மாஸ்ரர் உங்களுக்குக் கஷ்டம் நீங்கள் செய்யாது விடுங்கோ’ என்றவர். காரணம் எனக்குத் தெரியும் தானே? இப்படி இருக்குது நிலமை...”

“இதை பெரிசுபடுத்தாது விடுங்கோ”

“தவபாலனுக்கு மட்டும் பிடிக்காது. அவர் ஆட்களை வீட்டிற்கு அனுப்பி என்னைப் பெண் கேட்டவர். ஐயா என் விருப்பம் என மறுத்துவிட்டார். அதாலை அந்தாளுக்கு கடுங் கோபம்... ‘பொடிச்சியைக் கொண்டு உழைக்கப்பார்க்கிறீர்’ என ஏசிவிட்டார். ஒத்துக் கொள்ளாத கோபம் அந்தாளுக்கு... மூக்குள்ள வரை சளி இருக்கும். இதற்குப்போய் கவலைப் படுகிறதே, சேர்?”

சின்னராசு அமைதியாக தூரத்தே வெறித்துப் பார்த்தான்.

“அப்ப நீங்க உங்க மச்சான் இரத்தினராசாவை கட்டப் போறியளாக்கும்”
“ஆர் சொன்னது?”

“கேள்விப்பட்டன்…”

“மாத்துச் சடங்கு பேசினதுண்மை… அண்ணன் மணிவண்ணன் கனடாவில் தான் வேலை செய்யிற கம்பனியின்ர முதலாளியின் தங்கச்சி ஒருத்தியைக் கலியாணம் செய்யப்போறன் என்று கடிதம் எழுதியது. உங்களுக்குத் தெரியும்… நம்முடைய முத்துராசா அம்மானின்ர மோன்.. இரத்தினராசாவை மாத்துச் சம்பந்தம் கேட்டது இதால குழம்பிப் போச்சு. இப்ப இரத்தினராசா மச்சான் சாவகச்சேரியில குழைவண்டில் தம்பிப்பிள்ளையின்ரை மகளைச் செய்யப்போறாராம். மாத்துச் சம்பந்தம் குழம்பிப்போனது. அம்மாவுக்குக் கவலை..ஐயா காட்டிக்கொள்ளவில்லை…”

“அதெல்லாம் சரி.. உங்கட கலியாணம்…?”

“ஐயா தான் முடிவெடுக்க வேணும்… ”

“உங்களைக் கேக்கமாட்டினமா?”

“கேக்கலாம்…”

“கேட்டால்…?”

“சொல்லுவன்…”

“யாரை?’ அவன் குரலில் ஆர்வம் தொனித்தது.

கிளி அவனை வியப்புடன் ஏறிட்டாள்.

மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியா?

# 11

சிவப்பிரகாசம் பொன்னுத்துரையை ஏறிட்டுப்பார்த்தார். அவரது விழிகள் பொன்னுத்துரை கூறியவற்றை முதலில் நம்பமறுத்தன.

"நீர் கூறியவற்றை என்னால் நம்பாமல் இருக்க முடியவில்லை. என் மகன் துரைசிங்கம் உப்படிச் செய்யக் கூடியவன் தான். என் மகனை நானே நம்பவில்லை. வீடடைவிட்டு அவனை நான் எப்பவோ துரத்திப் போட்டன்... அதன் பிறகு உம்மட்ட வேலைக்கு வந்திருக்கிறான்... தன்ர வேலையைக் காட்டியிருக்கிறான். நான் என்ன செய்வது ? என்ர மனிசி பிடிவாதமாக சாவகச்சேரி தம்பிப்பிள்ளையின் மகளை முற்றாக்கிவிட்டாள். வாற திங்கள் கலியாண எழுத்து நடக்க இருக்குது பொன்னு. இனி எப்படி நிற்பாட்டிறது? துரைசிங்கத்தை நம்பி உம்முடை பெண்ணைக் கொடுக்கிறதில எனக்கு ஆட்சேபமில்லை... என்றாலும் தப்பிவிட்டீர்."

பொன்னுத்துரையின் வாழ்வில் துரைசிங்கம் இரண்டு விதங்களில் குறக்கிட்டுள்ளான் ஒன்று தேவராணியை கூட்டிச்சென்றமையால் மகளின் வாழ்வைப் பாழாக்கியுள்ளான். மற்றையது தாரணியைக் கலியாணம் செய்யவிருப்பதன் மூலம் இரத்தினராசாவின் வாழ்வையும் பாழாக்கியுள்ளான்... அவனது நடத்தை அவரது குடும்பத்தை இரு விதங்களில் பாதித்தது.

"தேவராணியின் வாழ்வு இன்று கேள்விக்குறியாக்கி விட்டான்."

"அதுக்கு நான் என்ன செய்வது? உமக்கு அதிர்ஷ்டம் என்று எண்ணிக்கொள்ளும்... துரைசிங்கம் எனது மகன் தான். ஆனால் எவருக்கும் நல்லவனல்லன்..."

பொன்னுத்துரை ஏமாற்றத்திற்குள்ளானார். தம்பிப்பிள்ளையும் தன் கையறு நிலையைத் தெரிவித்தார். செய்தி அறிந்த இரத்தினராசா குழம்பிப் போனான். தன்னை தாரணி மறுப்பாளென அவன் கனவிலும் எண்ணவில்லை. துரைசிங்கத்தின் மீது கோபம் கோபமாக வந்தது. தாரணியை அவன் இரு தடவைகள் முதல் சந்திப்பின் பின்னர் அவள் கல்வி கற்கின்ற தனியார் கணனி நிலையத்தில் கண்டான். அவனுடன் சகசமாகப் பழகியதுடன் அவனைப் புரிந்தவளாகவும் தென்பட்டாள்.

“தாரணீ, நான் ஏன் உம்மைத் தேடி வருகிறேன் என்பதை நீர் உணரவில்லையா? உம்மை மறக்க முடியவில்லை.”

”புரியாமலில்லை... புரிகிறது... ஆனால் வீட்டார் ஒத்துக்கொள்ள வேண்டும். அம்மாவின்ர விருப்புக்கு மாறாக நடக்க மாட்டன். பிறந்ததிலிருந்து இவ்வளவு காலம் வளர்த்தவ அம்மா. அவ சொற்படி தான் கேப்பன்...”

அன்றே அவள் தெளிவாகக் கூறிவிட்டாள். சிலவேளை இன்று துரைசிங்கத்தின் சுயருபம் தெரியாதோ? தேவராணியை அவன் கூட்டிச் சென்றமையை அவள் அறியாளோ?

அவன் அவளை மீண்டும் சந்தித்தான். உண்மைகளை எடுத்துரைத்தான்.

“இவை தெரியாமலா கலியாணத்தை ஒழுங்கு செய்தவை? அதிசயமாக இருக்குது. அம்மாவிடம் சொல்லிப் பார்க்கிறேனே?”

“இதில் சொல்ல என்ன இருக்கிறது தாரணி.. நீர் ஏமாந்து போனீர். துரைசிங்கம் நல்லவனல்லன். எத்தனை பெண்களை ஏமாத்தினானோ தேவராணியைப் போல!”

உலகம் தெரியாத அவள் அவனை நம்பத் தயாராகவில்லை.

மாலை கவிந்து கொண்டிருந்தது. வயல் வரம்பில் நடந்து கொண்டிருந்த துரைசிங்கத்திற்கு மேலை வானில் சூரியன் இறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. அதன் அழகை இரசிக்கும் மனநிலையில் அவனில்லை. வயலூடாக நடக்கும்போது மனம் சின்னாச்சியையும் அவளோடு சுகித்த வேளைகளையும்

எண்ணமிட்டது. எவ்வளவு காலமாகிறது? அவள் இப்போது எப்படியிருப்பாள்? அவள் கணவன் பாளைக் கத்தியோடு அவனைத் தேடித்திரிந்தான். இப்போது அவனை மறந்திருப்பான். ஒரு வருடத்திற்கு மேலாகிறது.

சின்னாச்சி அவனை நினைவு வைத்திருப்பாள். அவனோடு கழித்த பொழுதுகளை எப்படி மறக்க முடியும்,? அவர்களுடைய கள்ள உறவு நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தான் தெரியவந்தது. அதற்குப் பிறகுதான் சின்னாச்சியின் கணவன் சன்னதம் கொண்டான். அன்று கிராமத்தை விட்டு ஓடியவன் தேவராணியுடன் திரும்பி வந்தான். வீட்டார் ஏற்கவில்லை.

இரத்தினராசா வந்து துரைசிங்கத்தின் தாயோடு எவ்வளவோ வாதாடிப்பார்த்தான். மனிசி கேட்பதாகவில்லை. வலியப் பேசி வந்த கலியாணத்தைக் கைவிட துரைசிங்கத்தின் தாய் விடுவதாகவில்லை. திருமணத்தோடு மகன் திருந்தி விடலாம் என அப்பேதைத் தாயுள்ளம் நம்பியது.

இரவு படர்ந்து கொண்டிருந்தது. அவனுடைய கால்கள் அவனையறியாமல் சின்னாச்சியின் குடிசைப்பக்கம் சென்றன. உள்ளே நுழையத் திடமில்லாமல் பின்வாங்கின. குடிசைப் பக்கம் அவன் வந்ததையும் தயங்கி நின்றுவிட்டுப் பின்வாங்கி வயல் பக்கம் சென்றதையும் சின்னாச்சியின் கணவன் கவனித்தான்.

அதிகாலையே அச்செய்தி காட்டுத் தீ போல சுட்டிபுரம் கிராமம் எங்கும் பரவிவிட்டது. வயல் வெளியில் துரைசிங்கத்தை யாரோ வெட்டிக் கொலை செய்துவிட்டார்கள். சடலம் வயல் நடுவில் அனாதையாகக் கிடக்கின்றது.

தாய்க்காரி குய்யோ முறையோ எனக் கூச்சலிட்டாள்.

“இனிக்கத்தி என்ன பயன் சிவப்பிரகாசம். பேசாமல் காவல் துறைக்கு அறிவியுங்கோ... அவங்க வந்து விசாரித்து சந்தேகத்திற்கு இடமானவர்களைப் பிடித்துக் கொண்டு போவாங்கள்.”

பொலிசோ இராணுவமோ யாழ்ப்பாணத்தில் செயற்படாத காலம். இயக்கமே காவற்றுறையையும் நீதிமன்றத்தையும் செயற்படுத்திக் கொண்டிருந்தது. மூன்று இளைஞர்கள் துப்பாக்கி சகிதம் வானொன்றில் வந்து இறங்கினர்.

அவர்களிடம் பணிவில்லை. பதவிச் செருக்கிருந்தது. சடலத்தைப் பொறுப்பேற்ற பின்னர் முதல் விசாரணையைத் துரைசிங்கத்தின் தாயிடம் ஆரம்பித்தனர்.

“உங்களுக்கு ஆர் மேலாவது சந்தேகமுண்டா?”

“உண்டு...”

“யார் மீது?”

“யாழ்ப்பாணத்து ஒடி சருகு வியாபாரி பொன்னுத்துரையின்ர மகன் இரத்தினராசா மீது” அவன் வீடு தேடிவந்து என்னையும் செத்த மகனையும் கண்டபடி ஏசியவர்... எச்சரித்தவர்... அவருடைய தங்கச்சியை இவனுக்கு கட்டவில்லையாம். காதலித்துவிட்டு ஏமாத்திப் போட்டானாம் என்ரை பிள்ளைக்கு சாவகச்சேரி குழைவண்டில் தம்பிப்பிள்ளையின் மகள் தாரணியை பேசி முற்றாக்கி வாற கிழமை கலியாண எழுத்து எழுத இருந்த நாங்கள்”

“அப்படியே?”

அவர்கள் சாவகச்சேரி தம்பிப்பிள்ளையின் மனைவியைச் சந்தித்தபோது இரத்தினராசா மீதான கயிறு இறுகியது.

“சந்தேகமில்லை இரத்தினராசா தான்... என்ர மகள் தாரணியைக் கலியாணம் செய்யக் காத்திருந்தவன். மகளிடமும் கேட்டிருக்கிறான். மறுத்ததும் அவளுக்குப் பேசிய துரைசிங்கத்தின் மீது அடங்காத கோபமாகி இந்த எளிய வேலையைச் செய்திருக்கிறான்...”

காவல்துறைக்கு இவை போதும். அன்றிரவு படுக்கையில் வைத்து இரத்தினராசா கைது செய்யப்பட்டான். பொன்னுத்துரையின் வீடே கலங்கியது.

கிளியின் தம்பி தகவல் கொண்டு வந்தான்.

“இரத்தினராசா மச்சானை துரைராசு, அதுதான் சின்ராசுவின் தம்பியின்ரை, காம்பில தான் விசாரணைக்கு வைச்சிருக்கினமாம். துரைராசுதான் அந்த ஏரியாப் பொறுப்பாளன். அவன் நினைத்தால் இரத்தினராசாவை விடுவிக்கலாமாம்...”

“உவன் சுந்தரத்தின் மகன் துரைராசாவே ஏரியாப் பொறுப்பாளன்?” சுப்பையாவின் வார்த்தையில் வியப்பு. அதனைக் கவனியாமல் கனகசிங்கம் தொடர்ந்தான்.

“நீ அக்கா, சின்னராசு மாஸ்ரரிடம் ஒருக்காச் சொன்னால் நடக்கும். தமையன் சொன்னால் துரைராசு கேட்பான்.”

“உனக்கு உவங்களைப்பற்றித் தெரியாது... சொன்னதைச் செய்யிறவங்கள். குற்றம் செய்தால் பெத்த தேப்பனையும் சுடுவான்கள்...” என்றாள் கிளி. அந்த நேரம் வெளிப்படலையைத் திறந்து கொண்டு பொன்னுத்துரை பதற்றத்துடன் நுழைந்தார்.

“இப்ப என்ன செய்யிறது மச்சான்? அநியாயமாக இரத்தினராசாவைக் கொண்டு போட்டான்கள்... இனி நம்மிடையே மாத்து சம்பந்தம் சரி வராது. உன்ர மோன் மணிவண்ணனுக்கு கனடாவில் கலியாணம் நடக்க இருக்கிறது. சரி அது போகட்டும். நான் இரத்தினராசாக்கு கிளியை எடுக்கிறன். நீ முதலில இரத்தினராசாவை வெளியில கொண்டு வா மச்சான். சுந்தரத்தின் மக்கள் என்னோட வீடு கட்டத் தடை ஏற்படுத்தின கோபத்தில இருப்பான்கள். நீ கதைச்சால் சரிவரும். உவன் மாஸ்ரர் பொடியனை ஒருக்கா கேள்” என்றார் பொன்னுத்துரை. கிளி பேயறைந்தவளானாள்.

உள்ளூரப் பயமிருந்தது. மாணிக்கராசனைப் போல இரத்தினராசாவையும் முடித்து விடுவார்களோ? அம்மானின் பேச்சு எதற்கு அடிகோலுகிறது என்பதை அவள் அறியாமலில்லை.

“மாஸ்ரரை எப்படிக் கேட்பது?” என்றாள் கிளி.

“உன்னால முடியும் பிள்ளை. உன் பேச்சை மாஸ்ரர் கேட்பான்.” என கெஞ்சினார் பொன்னுத்துரை.

அப்போது அவசரமாக தேவராணி ஓடிவந்தாள்.

“அண்ணரை விட்டிட்டினம். துரைசிங்கத்தின் கொலைக்கு வேறை யாரையோ ‘அரஸ்ட்’ பண்ணியிருக்கினமாம்...” அவள் தொடர்ந்தாள்: ”நம்மடை ஆறுமுகம் அப்புவை காலமை இயக்கம் பிடிச்சிட்டுதாம்... பத்து இலட்சம் தந்தால்தான் விடுவினமாம்.”

# 12

அவரின் பேரன் மணிவண்ணனின் வயதொத்த ஒருவன் அவர் முன்னுள்ள கதிரையில் அமர்ந்தான். தான் காவி வந்த எகே47 றைபிளை தன்மடியில் குறுக்காக வைத்துக் கொண்டான். விசாரிக்க வந்திருக்கிறானாக்கும்.

“பெரியவர் நீர்தானா ஆறுமுகம்? கலட்டி சுருட்டுக் கொட்டில் முதலாளி? பத்து லட்சம் இப்ப என்ன பெரிய காசே உமக்கு? கட்டிப் போட்டுப் போகவேண்டியது தானே?”

“தம்பி இலேசாகச் சொல்லிட்டியள்... முந்தியெண்டால் பேச்சில்லாமல் தந்திடுவன். 156 பேர் வேலைசெய்த சுருட்டுக்கொட்டிலை இப்ப எட்டுப்பேர்தான் சுத்துகினம் இப்ப சிங்களப் பகுதிகளுக்கு சுருட்டு அனுப்புகிறதில்லை. அனுப்ப முடியாது... கெக்கிறாவ, மாகோப் பகுதிகளில் இப்ப அவங்களே ஆக்களை வைச்சு சுத்தி தனித்தனி விக்கிறாங்கள்...” என்ற ஆறுமுகத்தாரை அவன் ஏறிடப் பார்த்தான்.

“நாங்கள் நல்லா விசாரித்துத் தான் கூப்பிட்டிருக்கிறம்.. நல்லா உழைச்சனியள் தானே”

“மெய் தான் எல்லாம் செலவழிஞ்சிட்டுது. இப்ப நானும் மனிசியும் கொட்டிலும் தான் மிச்சம்...”

“இப்படித் தான் எல்லாரும் சொல்லுறது... பெரியவர். இந்த வயதில பங்கருகக்குள் கிடக்காமல் கேட்ட காசைக்கட்டிவிட்டுப் போங்கோ...”

“வித்துக் கட்டுறதுக்கு காணி பூமியில்லை. ஆக பனங்கூடல் காணி 40 பரப்பு இருக்கு ஆக்கள் குத்தகைக்கு ரெண்டு தலை முறையா இருக்கினம். கள்ளன் கையில கொடுத்தாலும் இருபதினாயிரம் பரப்பு தேறும்… அதை வித்துத் தாறன்… இரண்டு வாரம் தவணை தாருங்கோ..விலை போறதை அப்படியே தாறன்…”

“சரி.. நீங்க போங்கோ கூடல் சங்கத்திற்கு வைத்தி மாஸ்ரர் தானே தலைவர்.தங்கராசு தானே செயலாளர் நாங்க பேசுறம்…நீங்க போங்க…”

வைத்தி மாஸ்ரர் மேசை முன் கதிரையில் அமர்ந்திருக்க அவர்முன் இடப்பட்டிருந்த வாங்கில் தங்கராசு அமர்ந்திருந்தான்.

“தொழில் அடிப்படையில் மக்களைச் சாதிகளாகப் பிரித்தனர். பின்னர் சாதிய அடிப்படையில் உயர் சாதி எனப்பட்டோர் எங்களுக்கு செய்த கொடுமைகள் கொஞ்சமல்ல. தேநீர் கடைகளில் சிறுபான்மையினருக்கென வேறு பேணிகள் வைச்சினம்…கோயில்களை எங்களை உள்ளவிடாது பூட்டினார்கள். பள்ளிக்கூடங்களில பாகுபாடு காட்டினார்கள் கிணறுகளில தண்ணி அள்ளக்கூடாதென்றார்கள்.”

“இதெல்லாம் இப்ப. இல்ல”

“அப்படி நடத்தியது தெரியும். அவற்றைப் பெற புரட்சி செய்தம் போராடினோம் தெரியுமா? சும்மா உரிமைகளைப் பெற்றமா? எவ்வளவு பெரும் பாலான உத்தியோகங்கள் அவங்களிட்ட.. எங்கடை பிள்ளையள் றோட்டளக்குதுகள்…”

“அதுக்கு மாஸ்ரர் அவங்களே காரணம்? நாங்கள் படிப்பிக்காமல் விட்டிட்டம்…”

‘தங்கராசு உனக்குத்தெரியாது… உவங்கள் குலத்தொழில் என்று கூறிக்கூறி எங்களைச் சுரண்டிவிட்டான்கள்.”

"குடிமை அடிமை முறைகளைத் தான் ஒழிச்சிட்டியளே... யாழுப்பாணத்தில ஆரும் இப்ப குலத்தொழில் செய்யிறதில்லை ஆரும் அவங்கடை வீடுவீடாகப் போய் தீட்டுச் சீலைகள் சுமக்கக் கூடாததென்றும். அவங்கடை நன்மை தீமையில வெள்ளை கட்டக்கூடாது... நிலப்பாவாடை விரிக்கக்கூடாதென்றும் கட்டாடிமாரைத் தடுத்தும். வீடுகளில் போய்ச் சவரம் செய்யக்கூடாது. சவக்கிரியைகளில் கலந்துகொள்ளக் கூடாதென்றும் கொள்ளிக்குடம் உடைக்கக்கூடாது... காடாத்தக் கூடாதென்று பாபர்களுக்குச்சட்டம் போட்டம்..."

"அவர்கள் செந்தமாகத் தொழில் தொடங்கவில்லையா?"

"சொந்தமாக லோன்றி வைக்க எத்தனைபேரால முடிஞ்சுது? சலூன் திறக்க எத்தனை பாபரால முடிஞ்சுது? இதால ஆக நன்மை அடைஞ்சது செத்த வீட்டு சா மேளம் அடிக்கும் இரத்தினம் தான் எல்லாப் பறைமேளத்தையும் அடிச்சு உடைச்சியள். இரத்தினம் எல்லாரையும் கூலிக்குச் சேர்த்து சாவீட்டிற்கு றேற் பேசி அடிக்கிறான். முதலாளி ஆகிவிட்டான். என்ன செய்தம்? அது போகட்டும் இயக்கப் பொடியள் உங்களோட பனங்கூடல் காணி சம்பந்தமாகப் பேசினவயாம்..."

சம்பாஷனை தடம் மாறியதில் வைத்தி மாஸ்ரருக்கும் திருப்தி.

"மூன்று தலைமுறையாச்சுது. ஆட்சி உறுதி எழுதலாம் தான்... அதற்குள் இயக்கம் தலையிட்டுது.. ஆறுமுகத்தாருக்கும்... சிக்கல் பரப்பு பத்தாயிரம்படி வாங்குவம் ஆயத்தம்... செய்யும் தங்கராசு... உவன் கந்தசாமி சங்கானை சண்முகத்தாரிடமிருந்து தான் குடியிருக்கும் சிதம்பரத்து காணி நாலு பரப்பை இருபதாயிரம் படி வாங்கினானாம்..."

"அதுதான் அந்தக் கெப்பரிலதான் அப்படி நடந்தானாக்கும்"

'எப்படி?'

"இரத்தினம் தன்ரை ரெண்டாவது மகனுக்கு கந்தசாமியின் மூத்த மகளை கலியாணம் செய்யக் கேட்டவனாம். கந்தசாமி மறுத்திட்டான். என்னட்ட பெண் கேட்கிறார். ஒரு தகுதி வேணாம் என்றிட்டார்."

தங்கராசுவை ஆழமாக வைத்தி மாஸ்ரர் பார்த்தார்.

"உனக்குச் சொன்னால் என்ன... உவன் கந்தசாமிக்கு விசர் கிசர் பிடித்திருக்க வேணும். முந்த நாள் பின்னேரம் வந்து எனக்குச் சமனாகச் செற்றியில் கந்தசாமி அமர்ந்தான். எனக்குப் பிடிக்கவில்லைத் தான் நாலு பரப்புக் காணியும் நாலு லட்சம் பணமும் சீதனமாகத் தாறாராம். என்ரை மூத்தமகனைக் தன்ரை பெட்டைக்குச் செய்யட்டாம் அவ ஒன்பதாம் வகுப்புக் கூட படிக்கவில்லை. அவன் கம்பியுட்டர் எஞ்சினியர். கொஞ்சமாவது யோசிக்க வேண்டாமோ? தகுதி பார்க்க வேணாம் நான் எங்கை கந்தசாமி எங்கை? மலையும் மடுவும் நான் கரவெட்டி தான். கரையாரப் பகுதியிலிருந்து என்ரை பொம்புளைப் பிள்ளையளுக்கு பல கலியாணங்கள் சம்பந்தம் பேசிவந்தவை. மறுத்திட்டன். நாங்க யார்? மேலோங்கிக் கரையார் கண்டஇடத்தில் செய்யலாமே?"

தங்கராசு சிந்தனை வயப்பட்டான்.

'நீங்கள் என்ன இவங்களிட்ட எதிர்பாக்கிறியள்?"

"இன்னமும் போராடவேண்டும். சம உரிமைக்காகப் போராட வேண்டும். எங்களோட அவங்கள் சம்பந்தம் வைக்கும்வரை விடக்கூடாது." தங்கராசு யோசனையில் ஆழ்ந்தான்.

வானம் அழுதுகொண்டிருந்த ஒரு மாலைப் பொழுதில் அவர்களின் இடப்பெயர்வு நிகழ்ந்தது. நல்லூர் கந்தசாமி கோவிலின் மேற்கு மதில் வெளி எதிர்ப்பட்டது. வலிகாமமே அந்த வீதியில் நகர்வதை கிளி கண்டாள். ஒரு பிரதேசத்தையே இடம் பெயரவைக்கப் புலிகளால் முடிந்திருக்கிறது. காலை 10 மணிக்குத் தான் லவுட் ஸ்பீக்கர் பூட்டிய ஓட்டோ மூலம் அறிவித்தார்கள். 'பலாலியிலிருந்து இங்கை இராணுவம் யாழ்ப்பாணம் நோக்கி வெளிக்கிட்டுவிட்டது. இன்னமும் 12 மணி நேரத்திற்குள் யாழ்ப்பாணத்திற்குள் புகுந்துவிடும். வருகிற வழியெல்லாம் கொலை, கொள்ளை, கற்பழிப்பு செய்து வருகின்றது. உடனடியாக விடு வளவுகளைவிட்டு தென்மராட்சிக்கு அல்லது

வடமராட்சிக்கு இடம் பெயர்ந்துவிடுங்கள்.. இன்னமும் 12 மணி நேரத்துள் செம்மணிப்பாலம் தகர்க்கப்பட்டுவிடும். அதற்குள் நகர்ந்து விடுங்கள்' என்று அறிவித்தது மட்டுமின்றி அவர்கள் படலை படலையாகத் தட்டி மக்களைத் துரத்தவும் செய்தனர்.

யாழ்ப்பாணத்தில் பலாலி தவிர்ந்த பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தில் இருந்த காலத்தில் இப்பெரும் இடப்பெயர்வு நிகழ்ந்தது. வலிகாமத்தை ஓரிரு மணித் துளிகளுள் மனிதரற்ற பூமியாக்க விடுதலைப் புலிகளால் முடிந்தது. பயத்தால் புலிகளின் கட்டளையை ஏற்றுக் கொள்ள மக்கள் தயாராக இருந்தனர். தென்மராட்சியையும் வலிகாமத்தையும் செம்மணியூடாக நாவற்குழிப் பாலம் இணைத்தது. இப்பாலம் துண்டிக்கப்பட்டால் பெரு நிலத்துடனான இணைப்பும் துண்டிக்கப்படும். செய்தி கேட்டதும் பொன்னுத்துரை மச்சான் சுப்பையாவிடம் ஓடிவந்தார்.

“சேதி கேட்டீயளே மச்சான்? என்ன செய்யிறது?”

“ஓடத்தான் வேணும் பாலத்தை தகர்ப்பதற்கு முன்னர் அங்கால சாவகச்சேரிப் பக்கம் ஓடவேண்டியது தான்... வேறை வழி? சொன்னதைச் செய்வான்கள்... நீ மச்சான் தம்பிப்பிள்ளையர் வீட்டிலா தங்குவாய்?”

“அங்க தங்க ஏலாது... சரிவராது..தம்பிப்பிள்ளை மனிசியோட கொளுவல்... இர்த்தினராசாவின்ர சம்பந்தத்தால கொளுவினது... அவவோட சரி வராது... சாவகச்சேரி ரவுனுக்குள்ள சிதம்பரம் இருக்கிறான்... பழைய சினேகிதம்... காரோட அங்க போகப்போறம்... நீ தம்பிப்பிள்ளை வீட்டை போ... கல்வயலில அவயின்ர வீடு இருக்குது. வீடு வாசல் வளவு சொத்து எல்லாத்தையும் விட்டிட்டுப் போவம்...”

செம்மணி வீதி மக்களால் நிரம்பி வழிந்தது. எங்கு பார்த்தாலும் சோகம். கன்னங்களில் நீர் வழிந்து காய்ந்திருந்தது. ஆடு, மாடு, நாய் என வீதி நகர முடியாது நிரம்பிக் கிடந்தது. கொட்டும் மழை வேறு. தண்ணீர் விடாய் எடுத்தவர்கள் பொறுக்க முடியாத தாகத்தால் குடையில் வழிந்த மழைநீரை ஏந்திக்

குடிப்பதை கிளி கண்டாள் நடக்க முடியாத வயதானவர்களை பிள்ளைகளோ உறவினர்களோ கைகளில் தூக்கிச் செல்வதைக் கண்டாள். பரிதாபம் எங்கும் ஆட்சி செய்தது. இவர்கள் வாழ்ந்த வாழ்வு என்ன? அனைத்தும் ஒரு நாளில் சரி. பாரம்பரியமாக வாழ்ந்த வீடுகளையும் வளவுகளையும் விட்டு விட்டு அகதிகளாக இடம் பெயர்கிறார்கள். அதனால் தமிழீழம் கிடைத்து விடுமா?

கண்களில் காணப்பட்ட மர நிழல்கள். வீட்டு விறாந்தைகள், வெறுமனே கிடந்த கொட்டில்கள் என்பன இடம் பெயர்ந்த மக்களால் நிரம்பின. சாவகச்சேரி மக்கள் தமது இல்லங்களையும் உள்ளங்களையும் திறந்துவிட்டனர். இப்பெருந்தன்மை யாழ்ப்பாணக் குடாநாட்டின் எப்பிரதேச மக்களுக்கும் வராது என கிளி எண்ணமிட்டாள்.

கிளியின் எண்ணம் தம்பிப்பிள்ளையின் வீட்டை அடைந்ததும் வலுப்பெற்றது. அக்குடும்பம் அவர்களை இன்முகத்துடன் வரவேற்றது.

"பொன்னுத்துரையர் குடும்பத்துடன் வருவார் என எதிர்பார்த்தேன். நீங்கள் வந்திருக்கிறியள் பரவாயில்லை. இது உங்கட வீடு எதுக்கும் வெட்கப்படத்தேவையில்லை... பின் வளவில ஒரு மண் வீடு தனிய இருக்குது. வேணுமென்றால் அங்கேயும் இருக்கலாம்."

அவ்வேளை உள்ளேயிருந்து ஒரு பெண் வந்தாள்.

"இவள் என்ரை மகள் தாரணி..." என்றார் தம்பிப்பிள்ளை.

இரத்தினராசா தன்னை அவளிடம் இழந்ததில் எதுவும் சந்தேகமில்லை என கிளி எண்ணமிட்டாள. காண்போரை தாரணி கவர்ந்திழுத்தாள். அகன்ற அவள் விழிகள். பார்ப்போரைக் காந்தம் போலக் கவரும். இலட்சணமான அவள் முகப்பொலிவும் எப்போதும் சிரிக்கும் உதடுகளும் இரத்தினராசாவை அடிமை கொண்டதில் எதுவித ஐயமுமில்லை. வைத்த கண் எடுக்காது கிளி தாரணியைப் பார்த்தாள்.

"நீர் என்ன செய்கிறீர்?"

“படிக்கிறன். சொப் வயர்... ஜடீஎம் மில் கிளாஸ் பலோ பண்ணுறன்.”

“இங்க வசதி இருக்கா?”

“ஏன் இல்லை... சில யாழ்ப்பாணத்திலிருந்து வருவினம்... இப்பதான் எல்லா செக்ஷன் படிப்பிக்க சேர்மாரும் இலங்கை வந்திருப்பினம் வசந்தன் சேர் யாழ்ப்பாணத்திலிருந்து ஒழுங்காக வருவார். நல்லாப் படிப்பிப்பார்... மோட்டார் சயிக்கிலில்ல வாறவர். அவற்றை கிளாஸை மிஸ் பண்ணமாட்டன்”

இரத்தினராசாவின் உள்ளம் கனத்தது.

# 13

ஆறுமுகத்தாரை விசாரணைக்கு வரும்படி போராளி ஒருவன் இருக்கும் இடம் தேடி வந்து செய்தி சொன்னான். விசாரணை என்னைத் தொடர்ந்து வந்திருக்குது என எண்ணி வியப்படைந்தார்.

விசாரணைக்குப் போகாவிட்டால் பொடியன்கள் ஏதாவது தண்டனை தருவான்கள். நான் போறன். பின்னேரம் வரை நான் வராட்டி நீ வந்து பார் என்று மனைவியிடம் கூறிவிட்டு காம்பிற்குச் சென்றார்.

சுந்தரத்தின் இரண்டாவது மகன் துரைராசு தன்னை விசாரிப்பானென ஆறுமுகத்தார் எண்ணவில்லை. "தம்பி என்னை மன்னிக்க வேணும். உடுத்த உடுப்போடை வந்திருக்கிறன். கையிலை ஒரு சதமும் இல்லை. மனிசியின்ரை நகையை அறாவிலைக்கு வித்துச் சாப்பிடுகிறன். நகையையும் விரும்பி வாங்கினம் இல்லை. இருக்கிற நகை முடிஞ்சால் பிச்சைதான் எடுக்கவேணும் பிச்சை போடுற நிலையிலை இங்கை ஆரும் இல்லை. என்னைக் காசைக்கட்டச் சொல்லி கஷ்ரப்படுத்தாதை உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறன்." என்று கும்பிட்டு மன்றாடினார்.

துரைராசா வாய்விட்டுச் சிரித்தான். "பெரியவரே இப்ப வேறை விஷயம் கதைப்போம். அதற்கு ஒரு முடிவு எடுப்போம்."

"என்ன தம்பி சொல்லுறியள்"

"எங்க இயக்கம் சாதி வேறுபாட்டை சமூகத்தில் அனுமதிப்பதில்லை. இயக்கத்தில் கனபேர் சாதி பாராமல் கலியாணம் கட்டியிருக்கினம். இந்த

சமூகமும் இனிப்பார்க்கக்கூடாது. வெளிநாட்டிலை இப்ப சாதி பாராமல் பலபேர் கட்டியிருக்கினம். அது பெரிதல்ல. அங்க தொழில் அடையாளத்தோட ஆரும் திரிவதில்லை.

வெளிநாட்டில சம்பாதிக்க நல்ல ஒருதொழில், சொந்த வீடு. ஒரு கார், நவீன உடை இருந்தால் காணும். சாதி சனம் பார்ப்பதில்லை.

யாழ்ப்பாணத்தில அப்படியில்லை. அது போகட்டும்... இரு வீடுகள்... இணைவதிலும், இரண்டு உள்ளங்கள் இணைந்தால் போதும் அதைத் தான் முதலில பாக்கிறம். உங்கள் பேத்தி கிளிக்கும் அண்ணை சின்னராசுக்கும் கலியாணம் செய்ய உங்களுக்கு சம்மதம் தானே?"

"உங்கட பேரன் இரத்தினராசாவுக்கும் செய்யலாம். பொம்பளை ஒத்துக் கொள்ளவில்லை. தம்பிஜயாவின் மனிசி நல்லா ஏமாறப் போறா... தாரணி இப்ப விரும்புற வசந்தன் சேணியப் பொடியன்."

"சாதியில இப்ப என்ன இருக்குது... ஒன்டுமில்லை. எல்லாரும் வாழ்க்கைத்தரத்திலும் கல்வியறிவிலும் உயரவேணும்... தொழில் துறையிலும் மாற்றம் தேவை. சமூகம் மாறும்."

ஆறுமுகம் ஆமோதித்து தலையசைத்தார்.

"வேறை வழியில்லை. சுப்பையாவின் பனங்காணியிலை ஆமி பெரிய காம்ப் போட்டிருக்கிறாங்கள். ஒரு பனை மரம் கூட இல்லை. வயல் காணிப்பக்கமும் போக முடியாது. மண் அணை போட்டு மறிச்சிருக்கிறான்கள். இப்ப நாங்கள் ஏதிலிகள் வெறுங்கை முழம் போடாது"

எங்கடை குமருகள் வாழவேண்டுமென்றால் சமூக மாற்றம் அவசியம் தான் நான் ஒத்துக் கொள்ளுகிறன்.

## ஆசிரியரின் நாவல்கள்

| | | |
|---|---|---|
| 1. | நாகநாட்டு இளவரசி | 1962 |
| 2. | சித்திரா பௌர்ணமி | 1968 |
| 3. | நந்திக்கடல் | 1969 |
| 4. | ஆச்சி பயணம் போகிறாள் | 1969 |
| 5. | பிரளயம் | 1971 |
| 6. | முற்றத்து ஒற்றைப் பனை | 1972 |
| 7. | அலை கடல்தான் ஓயாதோ | 1972 |
| 8. | வாடைக்காற்று | 1973 |
| 9. | கொத்தியின் காதல் | 1975 |
| 10. | இரவின் முடிவு | 1976 |
| 11. | காற்றில் கலக்கும் பெருமூச்சுக்கள் | 1976 |
| 12. | காட்டாறு | 1977 |
| 13. | கங்கைக் கரையோரம் | 1978 |
| 14. | கனவுகள், கற்பனைகள், ஆசைகள் | 1981 |
| 15. | ஒருமைய வட்டங்கள் | 1982 |
| 16. | அக்கினிக் குஞ்சு | 1983 |
| 17. | நடந்தாய் வாழி வழுக்கியாறு | 1984 |
| 18. | கிடுகுவேலி | 1984 |
| 19. | ஓ அந்த அழகிய பழைய உலகம் | 1984 |
| 20. | கடல்கோட்டை | 1985 |
| 21. | யானை | 1988 |
| 22. | மழைக்காலம் | 1988 |
| 23. | தீம்தரிகிட தித்தோம் | 1988 |
| 24. | இந்த நாடு உருப்படாது ? | 1989 |
| 25. | மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து | 1989 |
| 26. | முதல் தவறு | 1990 |
| 27. | ஆறுகால் மடம் | 1991 |
| 28. | அக்கினி | 1991 |
| 29. | ஜன்மபூமி | 1991 |
| 30. | குவேனி | 1991 |
| 31. | கந்தவேள் கோட்டம் | 1991 |
| 32. | யாககுண்டம் | 1991 |
| 33. | பழைய வானத்தின் கீழே | 1992 |
| 34. | பௌர்ணமிக்காலம் | 1994 |
| 35. | காவோலை | 1994 |
| 36. | பூதத்தீவு புதிர்கள் | 1997 |
| 37. | கொழும்பு லொட்ஜ் | 1998 |
| 38. | மரணங்கள் மலிந்த பூமி | 2000 |
| 39. | போரே நீ போ | 2002 |
| 40. | யாழ்ப்பாணக்கிராமம் | 2002 |
| 41. | மீண்டும் ஒரு சீதை | 2003 |
| 42. | சாம்பவி | 2003 |
| 43. | வானும் கனல்சொரியும் | 2003 |
| 44. | ஈழ ராஜா எல்லாளன் | 2004 |
| 45. | ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் | 2005 |
| 46. | யுத்தபூமி | 2006 |
| 47. | மீண்டும் வருவேன் | 2007 |
| 48. | அலையின் கீதம் | 2008 |
| 49. | மெல்ல இருள் இனி விலகும் | 2009 |
| 50. | ருத்திர தாண்டவம் | 2009 |
| 51. | விடியலைத் தேடி | 2009 |
| 52. | மாமன்னன் சங்கிலியன் | 2012 |
| 53. | பனங்கூடல் | 2015 |
| 54. | வரமும் தவமும் | |

## சிறுகதைத் தொகுதிகள்

| | | |
|---|---|---|
| 1. | இதயமே அமைதி கொள் | 1972 |
| 2. | செங்கை ஆழியான் கதைகள் | 1976 |
| 3. | செங்கை ஆழியான் நாவல்கள் | 1992 |
| 4. | யாழ்ப்பாணத்து இராத்திரிகள் | 1993 |
| 5. | இரவு நேரப் பயணிகள் | 1995 |
| 6. | கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் | 2006 |
| 7. | குந்தியிருக்க ஒரு குடிநிலம் | 2006 |
| 8. | வற்றாநதி | 2007 |

## பல்சுவை நூல்கள்


| | | |
|---|---|---|
| 1. | 24 மணிநேரம் | 1977 |
| 2. | 12 மணிநேரம் | 1978 |
| 3. | மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது. | 1981 |
| 4. | கூடாரவாழ்க்கை. | 2007 |
| 5. | சுனாமி | 2004 |
| 6. | சுருட்டுக் கைத்தொழில் | |
| 7. | நானும் எனது நாவல்களும் | 2000 |
| 8. | யாழ்ப்பாணம் பாரீர் | 2015 |

## வரலாற்று நூல்கள்


| | | |
|---|---|---|
| 1. | நல்லைநகர் நூல் | 1987 |
| 2. | யாழ் கோட்டை வரலாறு | 1995 |
| 3. | ஈழத்தவர் வரலாறு | 1996 |
| 4. | களம் பல கண்ட கோட்டை | |
| 5. | யாழ்ப்பாண அரச பரம்பரை | 2000 |
| 6. | ஈழத்துச்சிறுகதைகள் | 2001 |
| 7. | மகாவம்சம் தரும் இலங்கை வரலாறு | 2003 |
| 8. | சூளவம்சம் தரும் இலங்கை வரலாறு | 2003 |
| 9. | நல்லூர் கந்தசுவாமி கோயில் | 2005 |
| 10. | யாழ்ப்பாண தேசம் | 2006 |
| 11. | பூதத்தம்பி | 2006 |
| 12. | இலங்கை சுருக்கவரலாறு | 2008 |
| 13. | யாழ்ப்பாணத்து ஆறுமுக சுவாமி | 2006 |
| 14. | கலட்டி அம்மன் வரலாறு | 2012 |

**கமலம் பதிப்பகம்**

75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



சாகித்ய ரத்னா செங்கை ஆழியான்
கலாநிதி க. குணராசா



## கானா பிரபா, ஆசிரியர் பற்றி...

கானா பிரபா அவர்கள் 20.07.2008 ஆம் ஆண்டு "இருக்கிறம்" என்ற சஞ்சிகையில் செங்கை ஆழியான் பற்றி எழுதிய கட்டுரையிலிருந்து...

"செங்கை ஆழியானின் படைப்புக்கள் அவை நாவலாகட்டும் அல்லது சிறுகதைகளாகட்டும் அந்தந்தக் காலகட்டத்து ஈழச் சமூகத்தின் காலப் பதிவுகளாக இருக்கின்றன" இவரின் ஒரு படைப்பை வாசிக்கும் ஒரு வாசகனுக்கு வரலாற்றின் எந்தக் காலக்கட்டத்தில், எந்த வகையான வாழ்வியல் அமைப்பில் ஈழத்தமிழன் இருந்தான் என்பதை அது காட்டி நிற்கும். ஈழத்தமிழரின் அலைக்கழிக்கப்பட்ட வாழ்வியல் வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் செங்கை ஆழியானின் நாவலைப் படித்தாலே போதும்.

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 011 2330195